ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

இயற்பா,

ப்ரபந்நஜநகூடஸ்த்தரான நம்மாழ்வாரருளிச்செய்த

திருவாசிரியம்.

இந்த க்ரந்தம்

அபாரகருணாஸாகரரான பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

மணிப்ரவாள வ்யாக்யாநத்துடனும், அரும்பதத்துடனும்,

சிங்கப்பெருமாள் கோவில்

மாடபூசி - ராமாநுஜாசார்யராலெழுதப்பட்ட

ப்ரதிபததாத்பர்யங்களுடனும், சேர்த்து

தர்க்க தீர்த்தரான

சிங்கப்பெருமாள்கோவில்-மாடபூசி-ராமாநுஜாசார்யரர்லும்,

ஸி. மூத்துக்ருஷ்ணநாயுடு அவர்களாலும்,

நாநாதேசாநீத அநேக ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினல்

பரிசோதிக்கப்பட்டு,

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால்,

பராங்குசதிருவவதாராதி ருOOச-வது ஸம்வத்ஸரமான

சோபக்ருத் ஸம்வத்ஸரத்தில்,

சென்னப்பட்டணம் :

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்தில்,

அச்சிடப்பட்டது.

விஜயதேதராம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை (லிமிடெட்.)

இயற்பா திருவாசிரியம்.

இந்த க்ரந்தம்.—நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் ௩-வது ஆயிரமான இயற்பாவில் ஆருவது திவ்யப்ரபந்தம். இதில் பாசுரங்கள்-எ. இதை அருளிச்செய்தவர் - நிர்ஹேதுக பகவத் கடாக்ஷலப்தஜ்ஞாநவைபவமுடைய ப்ரபந்ந ஜநகூடஸ்த்தரான நம்மாழ்வார். இவருடைய ப்ரபாவம், இச்சபையிலச்சிட்ட திருவிருத்தத்தி ன்பீடிகையிலும், இதற்கு வ்யாக்யாநமருளிச்செய்த பெரியவாச்சான்பிள்ளை வைபவம் இச்சபையிலச்சிட்ட தனிஸ்லோக பீடிகையிலும் விசதமாக எழுதப்பட்டது.

இப்படிக்கு,

இச்சபாபண்டிதரான - மாடபூசி - ராமாநுஜாசார்யர்.

இச்சபையில் அச்சிட்ட க்ரந்தங்கள்.

தனிஸ்லோகம் ஸவ்யாக்யாநம், ப்ரதிபத தாத்பர்ய ஸஹிதம்				3	4	0
பாரதாதி தனிஸ்லோகம்	,,	,,	,,	0	5	0
ராமசரமஸ்லோகம்	,,	,,	,,	0	3	0
திருவிருத்தம் ,,	,,	,,	,,	3	12	0
முதல் திருவந்தாதி	,,	ப்ரதிபதஸஹிதம்		1	2	0
இரண்டாம் திருவந்தாதி	,,	,,	,,	0	12	0
மூன்றும் திருவந்தாதி	,,	,,	,,	0	11	0
நான்முகன் திருவந்தாதி	,,	,,	,,	0	14	0
பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம்			,,	0	14	0
ஷண்மததர்சிநி			,,	0	3	0
தெலுங்கு லிபிசாண்டில்ய விசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம்			,,	1	2	0

மங்க

இப்படிக்கு,

கராலபாடி - ஆழ்வாரய்யா,

கார்யதர்சி - தனதிகாரி,

நெ. 36, வெங்கடாசலமுதலிதெருவு, சென்னப்பட்டணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

திருவாசிரியத்தனியன் வ்யாக்யாநம்.

அவதாரிகை.—(காசினியோர் தாம்வாழ) திருவாசிரிய மாகிற திவ்யப்ரபந்த தர்சியாய், தேசிகராயிருக்கிறவரை நிர்மலமான ஹ்ருதயத்திலேவைத்து விஸ்ம்ருதியின்றிக்கே நிரந்தர மங்களாசாஸநம் பண்ணுங்கோ ளென்கிறது.

அருளாளப்பெருமா ளெம்பெருமானா ரருளிச்செய்த

தனியன்.

காசினியோர் தாம்வாழக் கலியுகத்தே வந்துதித்து,
ஆசிரியப்பா வதனலரு மறைநூல் விரித்தானைத்,
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை,
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துதுமே.

அர்த்தம்.—காசினியோர் தாம் - பூலோகத்திலுள்ளார், வாழ - உஜ்ஜீவிக்கும்படி, கலியுகத்தே - கலியுகத்தில், வந்து - (பரமபதத்திலநின்றும்) வந்து, உதித்து - அவதரித்து, ஆசிரியப்பா அதனல் - ஆசிரியப்பா என்கிற பாக்களாலே, அரு-அறிவதற்கரிதான, மறை-வேதமாகிற, நூல்-சாஸ்த்ரத்தை, விரித்தானை-விஸ்தரிக்கச் செய்தவராய், தேசிகனை-ஆசார்யராய், திகழ்-விளங்காநின்ற, வகுளத்தாரானை-மகிழம்பூமாலையை யணிந்தவரான, பராங்குசனை-நம்மாழ்வாரை, மாசு அடையா-அஹங்காரமமகாரங்களாகிற அழுக்குச்சேராத, மனத்து-மநஸ்ஸில், வைத்து-ஸ்த்தாபித்து, மறவாமல்-மறவாதபடி, வாழ்த்துதும் - மங்களாசாஸநம் பண்ணுவோம்.

வ்யாக்யாநம்.—(காசினியோர் தாம்வாழ) கண்டதுகளுக்கு மேல் ஒன்றறியாத பூமியிலுண்டான மனுஷ்யர் ஜீவிக்க. (கலியுகத்தேவந்துதித்து) (க) కలౌపునఃపాపరతాభిభూతే-భక్తాత్మనా - సఉద్బభూవ-கலௌபுந: பாபரதாபிபூதே - பக்தாத்மநா - ஸஉத்பபூவ'' என்கிறபடியே ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத கலிகாலத்திலே யுகவர்ணக்ர

மாவதார மென்னலாம்படி ஆழ்வாரவதரித்தருளினு ராயிற்று. (வந்துதித்து) லோகாந்தரத்தில் நின்றும் இங்கே வந்துதித்தாரென்னு மதுதோற்றுகிறது. (க) "முன்னே வந்துதித்து" என்னுமாபோலே. (உ) வகுளபூஷணபாஸ்க ரோதயமிறே. மேலே "வகுளத்தாரானை" என்றிறே இருக்கிறது.

அவதரித்துச்செய்த கார்யமின்னதென்கிறது மேல் (ஆசிரியப் பாவதனு லருமறைநூல் விரித்தானை) என்று. தமிழுக்கு அநேகம் பாக்கள் உண்டாயிருக்கவும் ஆசிரியப்பாவாலே யாயிற்று திருவாசிரியம் செய்தருளினது. அருமறைநூல் விரிக்கையாவது - அரிய வேதமாகிற சாஸ்த்ரத்தை விஸ்த்ருதமாக்கி அதுவே நிரூபகமாம் படியானவரை. அருமறை நூலை (ந) வண்டமிழ் நூலாக்கினவரை. (தேசிகனைப் பராங்குசனை) வேதார்த்த தர்சியான பராங்குச தேசிகரை. (திகழ்வகுளத்தாரானை) விளங்காநின்ற திருமகிழ் மாலையைத் திருமார்பிலே யுடையவரை. (ச) "தண்டுளவத்தாரானை" என்னுமா போலே. (ரு) "தாமம்துளவோவகுளமோ" என்னக் கடவதிறே. (மாசடையா மனத்துவைத்து) (சு) "மாசற்றார் மனத்துளானை" என்றும், (எ) "தெளிந்தவென் சிந்தையகங் கழியாமே" என்றும், நிர் மலமான மநஸ்ஸிலே வைத்து. (அ) "வண் குருகைக் கோனும் நம்முடை குடிவீற்றிருந்தார்" என்னும்படி ஸஹ்ருதயமாகவைத்து. பரமஹம்ஸ ராகையாலே மாநஸபத்மாஸநத்தேயிறே யிருப்பது. (வகுளத்தாரானை மாசடையா மனத்துவைத்து) (கூ) "நாட்கமழ் மகிழ்மாலை மார்வினன் மாறன் சடகோபன்" என்னும்படியான ஆழ்வாரை. (க0) "சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவர் சீர்" என்னும்படி சுபாஸ்ரயமாக பாவித்து பக்திபண்ணி வைத்து.

(மறவாமல்வாழ்த்துதுமே) விஸ்ம்ருதியின்றிக்கே இவ்விருப்புக்கு மங்களாசாஸநம் பண்ணுவோம். அவரும் (கக) "ஊழிதோறூழி யோவாது வாழியவென்றுயாம் தொழவிசையுங்கொல்" என்றாரிறே.

(க) உபதேசரத்தினமாலை. எ.
(உ) சடகோபாஷ்டகம். ச.
(ந) திருவாய். ச. ரு. க0.
(ச)
(ரு)
(சு) திருமாலை, உஉ.
(எ) திருவாய். கூ. உ. ச.
(அ)
(கூ) திருவாய் - ச. க0. கக.
(க0) இராமாநுசநூற்ற. கஅ.
(கக) திருவாசிரியம். ச.

இத்தால்.—ஆழ்வார் திவ்யமங்களவிக்ரஹமே சுபாஶ்ரயமென்னுமத்தையும், மங்களாசாஸந விஷயமென்னு மத்தையும் சொல்லிற்றாயிற்று.

திருவாசிரியத் தனியன் வ்யாக்யாநம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

தாத்பர்யம்.—அஜ்ஞாநிகளான மநுஷ்யர்களும் கூட உஜ்ஜீவிக்கும்படி, பாபபூயிஷ்ட்டமான கலியுகத்திலே யவதரித்து, வேதார்த்தங்களைத் திருவாசிரிய மென்கிற திவ்யப்ரபந்த முகமாக வெளியிட்டருளின ஆசார்யராய், வகுளபூஷணரான ஆழ்வாரை நம்முடைய நிர்மலாந்தஃகரணத்திலே த்யாநித்து எப்போதும் மங்களாசாஸநம் பண்ணுவோம் வாருங்கோளென்று ஜநங்களை யழைக்கிறார்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

திருவாசிரிய வ்யாக்யாநம்.

அவதாரிகை.

திருவிருத்தத்தில், ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூபரூப குண
விபூதிகளைக் காட்டிக் கொடுக்கக்கண்டு அவனுடைய நித்யவிபூதி
யோகத்தையும் லீலாவிபூதியோகத்தையு மநுஸந்தித்து, நித்ய
விபூதியிலுள்ளார் நிரதிசயாநுபவமே யாத்ரையா யிருக்கிறபடியை
யும், அதுண்டறுக்கைக் கீடான ஆரோக்யத்தை யுடையரா யிருக்
கிறபடியையும், இவ்வருகுள்ளார் கர்மபரதந்த்ரராய், இதர விஷயங்
களிலே ப்ரவணராய், தண்ணிதான தேஹயாத்ரையே போகமா
யிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, ப்ராதாக்களிலே சிலர் ஜீவிக்க
ஒருவன் குறைய ஜீவிக்கப்புக்கால் தன் குறையை யநுஸந்தித்து
வெறுக்குமாபோலே, ஸர்வேஶ்வரனோடே நித்யாநுபவம் பண்
ணுகிறவர்களோடொக்கத் தமக்கு ப்ராப்தி யுண்டாயிருக்கச் செய்
தேயும் தாமத்தை யிழந்திருக்கிற படியை அநுஸந்தித்து, "இது
க்கடி தேஹஸம்பந்தம்" என்றுபார்த்து, இத்தைக்கழித்துக்கொள்ள
லாம் வழி தம்பக்கலிலொன்றுங்காணாமையாலே "இந்த ப்ரக்ருதி
ப்ராக்ருதங்களினோட்டை ஸம்பந்தத்தை யறுத்துத் தரவேணும்"
என்று அவன் திருவடிகளிலே தம்முடைய தசையை விண்ணப்பம்
செய்தார். இது பின்னைமுதற்பாட்டுக்குக் கருத்தன்றோவென்னில்,
முதலிலேயு மிப்பாசுரத்தை யருளிச்செய்து, முடிவிலேயும் (க)
"அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை" என்று உபக்ரமோப
ஸம்ஹாரங்கள் ஏகரூபமா யிருக்கையாலே இப் ப்ரபந்தத்திற்குத்
தாத்பர்யமுமதுவே. தாம் நினைத்தபோதே தம்முடைய வபேக்ஷி
தம் கிடையாமையாலே பிறந்த வாற்றாமையை யாவிஷ்கரித்தபடி
நடுவில் பாட்டுக்களடைய. ஸர்வேஶ்வரனுக் கிவரபேக்ஷிதம் சடக்
கெனச்செய்யப்போகாது; அதுக்கடி - சரதல்பத்திலே கிடந்த ஸ்ரீ
பீஷ்மரைக்கொண்டு நாட்டுக்குச்சிறிது வெளிச்சிறப்பைப் பண்ணிக்

(க) திருவிருத்தம். க00.

கொடுத்தாற்போலே,இவரையிடுவித்துச்சில ப்ரபந்தங்களை ப்ரவர்த்திப்பித்து ஸம்ஸாரத்தைத் திருத்த நினைத்தவனுகையாலே. இங்கே வைக்கலாம்படியல்ல விவருடைய த்வரை. "இவர் தாம் நிர்ப்பந்தம் பண்ணுகிறதும் அவ்வருகே போய் நம்முடைய குணுநுபவம் பண்ணுகைக்காக விறே; இவை தன்னையநுபவிப்பிப்போம்" என்று பார்த்துத் தன்னுடைய ஸ்வரூப ரூபகுணவிபூதிகளைக் காட்டிக் கொடுக்க, தேஹத்தினுடைய தண்மையை யநுஸந்திப்பதற்கு முன்பு காட்டிக்கொடுத்தது இவையேயாகிலும் "அவ்வருகேபோய் அநுபவிப்பது மோரநுபவமுண்டு" என்றுதோற்ருதபடி ஒரு வைசத்யத்தைப் பிறப்பிக்க, அவற்றிலே அங்யபரரா யநுபவிக்கிருர். ஸ்வரூபரூப குணங்களென்றிறே அடைவு; ஸ்வரூபத்தைவிட்டு ரூபத்திலே இழிந்து அநுபவிக்கவேணு மென்கிருராயிற்று. தான் துவக்குண்டிருப்பது மிதிலேயாகையாலே. இனி இவ்வஸ்து தான் நேர்கொடுநேரே யநுபவிக்கவொண்ணுதபடி முகத்திலே யலையெறிகையாலே கிண்ணகத்தி லிழிவார் மிதப்புக்கொண் டிழியுமாபோலே "உபமாந முகத்தாலே யிழிந்து அநுபவிக்கவேணும்" என்று பார்த்தார். ஸர்வதாஸாம்ய மில்லாததொரு வஸ்துவாகையாலே பகவத் விஷயத்துக் குபமாநமாகச் சொல்லலாவது தானில்லை; ஆனுலுமல்ப ஸாத்ருஶ்ய முள்ளதொன்றைப்பற்றி யிழியவேணுமிறே. ஒருமரகதகிரியையாயிற்று உபமாநமாகச் சொல்லுகிறது. அதின் பக்கல் நேர்கொடு நேர்கொள்ளலாவதொன் றில்லாமையாலே அது தன்னை சிக்ஷித்துக்கொண்டு இழிகிருர். ஸ்வரூபத்தை விட்டு ரூபத்தைப்பற்றின வோபாதி ரூபந்தன்னையும் விட்டு உபமாநத்திலே யிழிந்து அது தனக்கொப்பனை தேடியெடுத்துப் பேசுகிருர்.

செக்கர்மா முகிலுடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதிசூடி, அஞ் சுடர்மதியம் பூண்டு,
பலசுடர் புனைந்த பவளச்செவ்வாய்,
திகழ்பசுஞ் சோதிமரதகக்குன்றம்,
கடலோன் கைமிசைக் கண்வளர்வதுபோல்.
பீதகவாடைமுடி பூண்முதலா,
மேதகுபல் கலனணிந்து, சோதி
வாயவுங் கண்ணவுஞ் சிவப்ப, மீதிட்டுப்

பச்சைமேனி மிகப்பகைப்ப,
நச்சுவினைக் கவர்தலை யரவினமளியேறி,
எறிகடல் நடுவு ளறிதுயிலமர்ந்து,
சிவனயனிந்திர னிவர்முதலனைத்தோர்,
தெய்வக்குழாங்கள் கைதொழக்கிடந்த,
தாமரையுந்தித் தனிப்பெருநாயக,
மூவுலகளந்த சேவடியோயே. (க)

அர்த்தம்.—செக்கர் - சிவந்த, மா-பெரிய, முகில்-மேகத்தை, உடுத்து - அரையிலணிந்து, மிக்க-அதிகமாக, செம்-சிவந்த, சுடர்-தேஜஸ்ஸையுடைய, பரிதி - ஸூர்யனை, சூடி - சிரஸிலணிந்து, அம் - அழகிய, (குளிர்ந்த), சுடர்-காந்தியையுடைய, மதியம் - சந்த்ரனை, பூண்டு - அணிந்து, பல-(நக்ஷத்ரங்களாகிற) அநேகமான, சுடர்-தேஜஸ்ஸை, புனைந்த - அணிந்ததாய், பவளம்-பவளங்களைப்போல், செம்-சிவந்த, வாய் - இடங்களை யுடையதாய், திகழ்-விளங்காநின்ற, பசும்சோதி-பச்சைநிறத்தையுடைய, மரதகக்குன்றம்-மரதகமணிமயமான பர்வதமானது, கடலோன் - ஸமுத்ரத்திற்கு அதிபதியான வருணனுடைய, கைமிசை-கைமேலே, கண் வளர்வதுபோல் - நித்ரை செய்வதுபோல், பீதகவாடை - பீதாம்பரம், முடி - கிரீடம், பூண் - கண்டி, முதலா - முதலான, மே - பொருந்தி, தகு-தகுந்திருக்கிற, பல்கலன் - அநேக ஆபரணங்களை, அணிந்து - அலங்கரித்துக்கொண்டு, சோதி, உஜ்வலமான, வாயவும்-திருப்பவளமும், கண்ணவும்-நேத்ரங்களும், சிவப்ப-சிவந்திருக்கும்படியாகவும், மீதிட்டு-மேல்விழுந்து, பச்சைமேனி-பசுமைநிறமானது, பகைப்ப-ஸ்பர்த்தைபண்ணும்படியாகவும், நச்சு-(சத்ருக்களைமுடிக்கையில்) விஷமான, வினை-வ்யாபாரங்களையுடையனாய், கவர்-கவிழ்ந்திருக்கிற, தலை-சிரஸ்ஸுக்களையுடைய, அரவு-ஆதிசேஷனாகிற, அமளி-படுக்கையின்மேல், எறி-எறி, எறி-அலைமோதுகிற, கடல் நடுவுள் - ஸமுத்ரத்தின் மத்தியில், அறிதுயில்-ஜகத்ரக்ஷணசிந்தையாகிறயோகநித்ரையை, அமர்ந்து-அடைந்து, சிவன்-ருத்ரன், அயன் - ப்ரஹ்மா, இந்திரன்-இந்த்ரன், இவர்முதல்-இவர்கள் முதலான, அனைத்தோர்-ஸகலமான, தெய்வம்-தேவர்களுடைய, குழாங்கள்-கூட்டங்கள், கைதொழ-ஸேவிக்கும்படி, கிடந்த-பள்ளிகொண்டவனாய், தாமரை உந்தி-நாபீகமலத்தையுடையவனாய், தனி - அத்விதீயனாய், பெரு-ஸர்வாதிகனை, நாயக-ஸ்வாமீ! மூவுலகு-மூன்றுலோகங்களையும், அளந்த-ஆக்ரமித்த, சே-அழகிய, அடியோயே - திருவடிகளை யுடையவனே!

வ்யாக்யாநம்.—முதற்பாட்டு.—(செக்கர்மாமுகிலுடுத்து) ஆனையைக்கண்டார் "ஆனை, ஆனை" என்னுமாபோலே, அநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமையாலே ஏத்துகிறார். ஶ்யாமமான நிறத்துக்குப்பர

பாகமான சிவப்பை யுடைத்தாய், கொடுக்கும் கொய்சகமும் வைத்துடுக்கலாம்படியானவளவையுடைத்தாய், ஸௌகுமார்யத்துக்குச் சேர்ந்து குளிர்ந்திருக்கிற முகிலை அரையிலே பூத்தாற்போலே யுடுத்து. (மிக்க செஞ்சுடர் பரிதிசூடி) (க) దివిసూర్యసహస్రస్య భవేద్యుగపదుత్థితా—திவிஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா'' என்று சொல்லுகிறபடியே, ஸஹஸ்ரகிரணங்களென்றாற்போலே ஒரு ஸங்க்யையுண்டிறே ஆதித்யனுக்கு; அப்படிபரிச்சிந்நகிரணனன்றிக்கே அநேகமாயிரம் கிரணங்களையுடையானொரு ஆதித்யன் வந்துதித்தாற்போலேயாயிற்று திருவபிஷேக மிருப்பது. மிக்க சிவந்திருந்துள்ள கிரணங்களையுடைய பரிதியைச்சூடி. (அஞ்சுடர்மதியம்பூண்டு) தன்னுடைய ஸ்வாபாவிகமாயிருந்துள்ள ப்ரதாபத்தாலே யொருவருக்குங் கிட்டவொண்ணாதபடி யிருக்கிற ஆதித்யனைப் போலன்றிக்கே சீதளமான கிரணங்களையுடையனாய், குறைதல் நிறைதல் மறுவுண்டாதலின்றிக்கே வைத்தகண் வாங்காதே கண்டிருக்கவேண்டும்படியான அழகையுடைய சந்த்ரனைப்பூண்டு. (பலசுடர்புனைந்த) மற்றும் பல நக்ஷத்ராதிகளையும் பூண்டு. (பவளச்செவ்வாய்) பவளமாகிற சிவந்தவாயை யுடைத்தாய். உபமேயத்தில் வந்தால், பவளம் போலே சிவந்தவதரத்தை யுடையனா யென்றாகிறது; இங்கு பவளம் போலே சிவந்த இடங்களையுடைத்தா யென்றாகிறது. (திகழ் பசுஞ்சோதி மரதகக்குன்றம் கடலோன்கைமிசைக் கண் வளர்வதுபோல்) தனக்கிவ்வருகுள்ளவை யெல்லாம் கீழாம்படி மிகைத்து உஜ்வலமாகா நின்றுள்ள ஶ்யாமமான தேஜஸ்ஸை யுடைத்தான மரதககிரியானது கடலுக்கதிபதியான வருணனுடைய திரைக்கையிலே கண் வளர்வதுபோல். சாய்வதுபோலென்ன வமைந்திருக்க உபமாநத்திலும்கூசி (கண்வளர்வதுபோல்) என்கிறார். திருமலைநம்பி எம்பெருமானாருக்கொருவரை யடையாளஞ்சொல்லுகிறவிடத்திலே "பொன்னாலே தோடுபண்ணினாலிடவொண்ணாதபடியான காதையுடையராயிருக்குமவரை யறிந்திருக்கையுண்டோ?'' என்றாராம். (பீதகவாடை) செக்கர்மா முகிலுடுத்து'' என்கிறது. (முடி) "செஞ்சுடர் பரிதிசூடி'' என்கிறது. (பூண்) "அஞ்சுடர் மதியம்பூண்டு'' என்கிறது. இவை தொடக்கமாக. (மேதகுபல்கலனணிந்து) "பலசுடர்

(க) விஷ்வக்ஸேந ஸம்ஹிதை.

புனைந்த'' என்கிறத்தை. (மேதகு) ஸ்வரூபாநு ரூபமென்னும்படியாயிருக்கை. மேவித் தகுதியாக என்றுமாம். கீழ்ச்சொன்னவை முதலாகத் தகுதியா யிருந்துள்ள பல வாபரணங்களையு மணிந்து. அவன் விபூதியைப் பரிச்சேதிக்கிலும் பரிச்சேதிக்கப் போகாததாயிருக்கை. பாஷ்யகாரர் அநேக § பூஷணங்களை யருளிச்செய்து பின்னையும் ஆதி சப்தத்தாலே தலைக்கட்டுமாபோலே "பல்கலன்" என்றுதலைக்கட்டுகிறார். (க) "నూపురాద్యపరిమిత దివ్యభూషణ - நூபுராத்யபரிமித திவ்யபூஷண" என்பரிறே. (சோதிவாயவுங் கண்ணவுஞ்சிவப்ப) த்ருஷ்டாந்தத்திலே யொன்றைச்சொல்லி இங்கே இரண்டைச்சொல்லுவா னென்னென்னில், அதுக்காக விறேசிவந்த விடங்களென்றது. (மீதிட்டு) கீழ்ச்சொன்னவற்றாலும் அவற்றை நெருக்குகிறதன்னாலும் ஒன்றையொன்று ஸ்பர்த்தித்து ஶ்யாமமான நிறம் மிகவுமுஜ்வலமாக; அவற்றையடைய நெருக்கியுள்ளே யிட்டுக் கொள்ளப் பார்த்ததானவத்தையுமழித்துப் ப்ரஸரிக்க. (நச்சுவினை) (உ) "வாய்ந்தமது கைடபரும்வயிறுருகி மாண்டார்" என்கிறபடியே தனியிடத்திலும் எதிரிகளாய் வருவாரும் முடியும்படியான நச்சுத்தொழிலை யுடைத்தாயிருக்கை. (கவர்தலை) பலதலைகளையுடைத்தாய். ஸ்வஸ்பர்சத்தாலேபணைத்ததென்றுமாம். ப்ரஜையை மடியில்வைத்திருக்குந் தாயைப்போலே. பெரிய பெருமாளைமடியிலே வைத்திருக்குந் தாய்தானும். அநந்தாழ்வான் திருக்கோட்டியூருக்கு நடந்தவிடத்திலே பட்டரைக்கண்டு அவர் திருமேனியிலே இப்படி செய்தானும். 'ஆண்டாளுக்கு முந்துற ஒரு பிள்ளையுண்டாய் அவனையிழக்க, "அங்ஙனே செய்யவொண்ணாது, இவன் ஜீவிக்கவேணும்" என்று எம்பெருமானார் பெரியபிராட்டியாருக்குநீராட்டி "மஞ்சணீர்குடித்த பிள்ளையாக வளர்க்கவேணும்" என்று காட்டிக்கொடுத்தருளினாராயிற்று. அந்த வாஸநையாலே "பெரிய பிராட்டியார் மகன்" என்றுதான் பட்டரை அநந்தாழ்வான் சொல்லுவது. (அரவினமளி) நாற்றம்குளிர்த்தி மென்மைகளையுடையனான திருவனந்தாழ்வானகிற படுக்கையிலேஏறி. படுக்கையிலே யேறுகிறவிதுதன் பேறாகவிருக்கையாலே, நம்பெருமாள் ஆறுகால் சிவிகையை ஸாதர

§ குணங்களைஎன்றுபாடாந்தரம்.

(க) கத்யத்ரயம். (உ) மூன்றாம்திருவந், ௯௯.

மாகப்பார்த்து எறியருளுமா போலே பெரியவாதரத்தோடே யாயிற்று எறியருளுவது. அமளி-படுக்கை. (எறிகடல்நடுவுள்) ஸ்வஸந்நிதாநத்தாலே யலையெறிகிற கடலிலே. (அறிதுயி லமர்ந்து) அறிவேவடிவாக வுடைத்தாயிருந்துள்ள நித்ரையிலே பொருந்தி. அல்லாதார்க்கு முதல் தன்னிலே யொன்று தோற்றாதே நெஞ்சிருண்டிருக்கும்; சக்ஷுராதிகரணங்களாலே பதார்த்த தர்சநம் பண்ணிப் போதுபோக்குவர்கள். அக்கண்தன்னையுஞ் செம்புளித்தா லுள்ளோடு புறம்போடு வாசியற விருண்டிருக்கும். இவன்தான் திருக்கண்கள் செம்புளித்தால் ப்ரகாசமுள்ளே யுறைந்திருக்குமத்தனை. ஜகத்ரக்ஷணசிந்தைபண்ணுதல், த்யேயவஸ்து தனக்குப் புறம்பில்லாமையாலே ஸ்வாநுஸந்தாநம் பண்ணுதல், திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்தருளினு விருக்கும்படி. (சிவனயனிந்திரனிவர் முதலனைத்தோர் தெய்வக்குழாங்கள் கைதொழ) நாட்டுக்காஶ்ரயணீயராக ப்ரஸித்தரானவர்கள் தாங்கள் பக்நாபிமாநராய்த் தொழாநிற்பர்கள். ப்ரஹ்மாதிகள் தொடக்கமாக அநேக தேவதாஸமூஹமானது தங்களிறுமாப்பைப்பொகட்டு, சாய்ந்தருளின வழிகிலே தோற்று எழுத்துவாங்கி நிற்பர்கள். இவர்களிப்படியே தொழாநின்றால் அவன் செய்வதென்னென்னில், (கிடந்த) கடலிலேஇழிந்த கொக்குத்திரள்கள் விக்ருதமாங்காட்டில் அக்கடலுக்கொருவாசி பிறவாதிறே. ஏகரூபமாகச் சாய்ந்தருளுமாயிற்று. "சிலர் தொழாநிற்கக்கிடந்தோம்" என்கிறதுனுக்கும் பிறவாதாயிற்று ஐஶ்வர்யச் செருக்காலே. இவர்க்குமிரண்டும் ஸ்வரூபாந்தர்க்கதமாயிற்று. (தாமரையுந்தி) ஸகல ஜகதுத்பத்தி காரணமான திருநாபிகமலத்தை யுடையனாய். இப்படி யிருப்பா ரவ்வருகாரேனு முண்டோ வென்ன, (தனிப்பெருநாயக) இத்தால் அவ்வருகில்லை யென்னுமிடத்தைச்சொல்லுகிறது. அவ்வருகில்லையாகில் தன்னோடொக்கச் சொல்லலாவாருண்டோவென்னில் (தனி) அத்விதீயநாயகன். புறம்பேயுஞ்சிலரை நாயகராகச் சொல்லக்கடவது ஔபசாரிகம். (க) "రుద్రంసమా శ్రితా దేవా రుద్రో బ్రహ్మాణమాశ్రితః । బ్రహ్మా మామాశ్రితో రాజన్ నాహం కంచిదుపాశ్రితః - ருத்ரம்ஸமாஶ்ரிதாதேவா ருத்ரோப்ரஹ்மாண மாஶ்ரிதஃ, ப்ரஹ்மாமா மாஶ்ரிதோராஜந் நாஹம்கஞ்சிதுபாஶ்

(க) பார - விஷ்ணுதர்மம்.

ரிதः'' என்றாற்போலே ஆபேக்ஷிகமான ஐஶ்வர்யத்தையுடையரா யிறேஇவர்களிருப்பது. இவ்வருகுள்ளார்க்கெல்லாம்தான் நிர்வாஹ கனாயிருக்கிறவோபாதி தனக்கவ்வருகொரு நிர்வாஹகனையுடைய னல்லாத அத்விதீயபரதேவதை. நிமித்தோபாதாநஸஹகாரிகளும் தானேயென்கை. (மூவுலகளந்த) தன்பக்கல் வந்தநுபவிக்கமாட்டா தார்க்கு அவர்களிருந்தவிடத்திலே சென்று அநுபவிப்பிக்கும். (சேவடியோயே) இழந்தவிழவை மீட்டு ரக்ஷியாதே காதுகனானே யாகிலும் விடவொண்ணாதபடியாயிற்று திருவடிகளின் போக்யதை யிருக்கிறபடி. கண்ணழிவற்றவழகையும்குணங்களையுமநுபவித்தார்.

அரும்பத விளக்கம்.

:(o):

☞ ப்ரவேஶே, ஸம்ஸாரத்திலே ருசியற்ற விவர்க்கு தேஹஸம்பந் தத்தை அறுதிருப்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (ஸம்ஸாரத்தை) இத்யாதி.

முதற்பாட்டு:—(செக்கர்) அநுபவிக்கிறாராகில் நேர்கொடுநேரே அநுபவி யாமல் த்ருஷ்டாந்தமுகேந அநுபவிப்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (முந்துறத்ருஷ்டாந்த) இத்யாதி. திருப்பீதாம்பரத்துக்குச் சிவப்பு சொல்லு கை யொழிய மேகஸாம்யஞ்சொல்லுவா னென்னென்ன அருளிச்செய்கிறார்

☞ இந்த அரும்பதம் இந்த வ்யாக்யாநத்திற்குச் சிறிதும் சேராது. இப்போதகப்பட்ட வ்யாக்யாந தாளபத்ர ஸ்ரீகோசங்களிலும் முன் அச்சிட்ட பகவத்விஷயத்தில் அங்கங்கு சேர்த்திருக்கிற திருவாசிரிய வ்யாக்யாநத் திலும், இயற்பா திருவந்தாதி முதலிய க்ரந்தங்களின் உரையுடன் சேர்த்து அச்சிட்டிருக்கிற ஸ்ரீகோசத்திலும் இவ் வ்யாக்யாநமே எதத்ஸமாநாநு பூர் வீகமாகவே காண்கிறது. திருவாசிரியத்திற்கு வேறு வ்யாக்யாநமுண்டென் பதைப்பற்றி ஸம்ப்ரதாய வித்தமர்களுள்ள விடங்களெங்கும் விசாரித்தவிடத் திலும் வேறு வ்யாக்யாநமுள்ளதாக அல்பமும் தெரியவரவில்லை. இவ்வரும் பதம் இவ் வ்யாக்யாநத்திற்குச் சேராவிடினும் வேறு வ்யாக்யாநமகப்படா விடினும், எந்த மஹான்களுக்காவது இவ்வரும்பதத்துக்கநுகுணமான வ்யா க்யாநமாவது வேறு வ்யாக்யாநமாவது அகப்படில் அவர்களுக்கு இவ்வரும் பதம் உபயோகிக்குமென்று இவ்வரும்பதம் லுப்தமாகாமற்படி இங்கு சேர் த்து அச்சிடப்பட்டது.

(முகில்) இத்யாதி. பரிதி-ஆதித்யன்; சிவந்த திருவபிஷேகத்திற்கு மத்யாஹ்ந ஆதித்யனை த்ருஷ்டாந்தஞ் சொல்லலாமோ வென்ன அருளிச்செய்கிறார் (பாலஸூர்யனுக்கு) இத்யாதி. (மேதகு) மே-மேனிக்கு, தகு-தக்கிருக்கையாதல், நாமைகதேசே நாமக்ரஹண மென்கிற ந்யாயத்தாலே. "மே" என்கிறது-மேவி என்றாய், அது தக்கிருக்கையாதல். "மே" என்று மேன்மையாய், மேம்பாடாதல். (நச்சுவினை) வினையென்று க்ரியையாய், நஞ்சாலே நலிகையைச் சொல்லுகிறது. பலதலைகள்வேண்டுவானென்னென்ன அருளிச்செய்கிறார் (எத்துகைக்கு) இத்யாதி. இப்படிப்பட்டவனை யாஶ்ரயியுங்கோளென்று க்ரியாபதமின்றிக்கே யிருப்பானென்னென்ன, அருளிச்செய்கிறார் (வினையால்) இத்யாதி.

தாத்பர்யம்.—திருவிருத்தத்தில், ஸர்வேஶ்வரனைக்கண்டநுபவிக்கைக்காக ஆழ்வார் பதறினபதற்றமெல்லாம் தீரும்படி ஸர்வேஶ்வரன் தன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை ஆழ்வார்க்குப் ப்ரகாசிப்பித்தவளவில், அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தைக் கண்டு அநுபவித்துப் பரவசராய்த் தாமநுபவித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

தன்மடியிலே சாய்ந்தருளின உன்னுடைய வடிவழகையே ஸேவித்துக்கொண்டு கவிழ்தலையிட்டிருக்கிற திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியில் சாய்ந்தருளி, நீ ஸ்ருஷ்டித்த ஜகத்துக்குத் தீங்குவிளைத்த மதுகைடபர் முதலிய அஸுரர்களை முடித்து, பின்னும் இஜ்ஜகத்ரக்ஷணத்திற்குபாய மென்னென்று யோசித்துக்கொண்டு கண்வளர்ந்தருளும் போது, ஸகலஜத்காரணனான உன்னை யாஶ்ரயித்துத் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளுகைக்காக ப்ரஹ்மருத்ரேந்த்ராதி ஸகலதேவர்களும் ஸர்வகாலமுமாஶ்ரயிக்கும்படி திருப்பாற்கடலின் மத்யத்தில், பள்ளிகொண்ட அத்விதீயனாய் அபரிச்சிந்ந வைபவனாய், உன்னைக்கிட்டி யாஶ்ரயியாதாரும் தன் திருவடி ஸ்பர்சத்தினால் உஜ்ஜீவிக்கும்படி த்ரிவிக்ரமனாய் ஸகலலோகங்களையு மளந்த ஸுலபனான ஓ ஸ்வாமி! ஸ்ப்புரத்கிரீடாங்கதஹாரகண்டிகா பீதாம்பராத்யநேக திவ்யாலங்காராலங்க்ருதனாய், அத்யுஜ்வலமான பவளம்போன்ற திருவதரம் திருக்கண்கள் முதலிய ஸுந்தர திவ்யாவயவங்களையுடையனாய், அந்த திவ்யாபரண திவ்யாவயவ சோபையை யடக்கவேணுமென்று ஸ்ப்பர்த்தை பண்ணுவதுபோல் எங்கும் பரந்தஶ்யாமமான திருநிறத்தையுடையவனான உன்னுடைய திவ்யமங்கள விக்ரஹமானது, செவ்வானம் சூழ்ந்த தாழ்வரையையும், சந்த்ரஸூர்ய நக்ஷத்ரங்கள் ஸஞ்சரிக்கிற கொடுமுடியையும், சிவந்த பவளக்கொடிகள் நிறைந்த அவ்வவ ப்ரதேசங்களையு முடையதாய், ஸமுத்ரமத்தியி லமைந்திருக்கும் பச்சைமாமலைபோல் என் கண்முன்னேவந்து தோன்றாநின்றது.

உலகு படைத்துண்ட வெந்தை, அறைகழல்
சுடர்ப் பூந் தாமரை சூடுதற்கு, அவாவா
ருயிருருகி யுக்க, நேரிய காத
லன்பி லின்பீன் றேறல், அமுத
வெள்ளத் தானாம் சிறப்புவிட்டு, ஒருபொருட்
கசைவோ ரசைக, திருவொடு மருவிய
இயற்கை, மாயாப் பெருவிற லுலகம்
மூன்றி னொடுநல் வீடு பெறினும்,
கொள்வ தெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே. உ.

அர்த்தம்:—உலகு-லோகங்களை, படைத்து-ஸ்ருஷ்டித்து, உண்ட - (ப்ரளயகாலத்தில்) விழுங்கிய, எந்தை - எனக்குஸ்வாமியான ஸர்வேஸ்வரனுடைய, அறை-சப்தியாநின்ற (வீரக்கழலையுடைய), கழல் - திருவடிகளாகிற, சுடர்-உஜ்வலமான, பூ-அழகிய, தாமரை - தாமரைப்பூவை, சூடுதற்கு - சூடுகைக்கு (உண்டான), அவா-ஆசையினால், ஆர்-நிறைந்த, உயிர்-ஆத்மாவானது, உருகி-கரைந்து, உக்க-சிதிலமாய், நேரிய-ஸம்பவித்த, காதல்-(பக்திரூபமான) ஆசையென்ன, அன்பில்-(பக்தியினாலுண்டான பரமபக்திரூபமான) ப்ரீதியிலுள்ள, இன்பு-இனிமைஎன்ன, (இவற்றிலுண்டான), ஈன்-போக்யதையின், தேறல்-வைலக்ஷண்யமாகிற, அமுதவெள்ளத்தானாம்-அம்ருதப்ரவாஹத்திலே (மூழ்கி) யிருக்கையாகிற, சிறப்பு-மேன்மையை, விட்டு-விட்டு, ஒரு-(இதைக் காட்டிலும்) அல்பமாகிய, பொருட்கு - புருஷார்த்தத்திற்காக, அசைவோர்-அல்லாடுமவர்கள், அசைக - அலையட்டும். திருவொடு - ஐஸ்வர்யத்தோடு, மருவிய-பொருந்தியிருக்கிற, இயற்கை - ஸ்த்திதியோடும், மாயா - நசியாத, பெரு-அதிகமான, விறல்-பலத்தோடும், உலகம்மூன்றினொடு - மூன்றுலகங்களோடும்கூட, நல்வீடு-விலக்ஷணபுருஷார்த்தமான மோக்ஷத்தை, பெறினும்-பெற்றாலும், தெள்ளியோர் - ஜ்ஞாநவான்களுடைய, குறிப்பு - அபிப்ராயம், கொள்வது - (அவற்றைப்) பெறுகைக்கு, எண்ணுமோ-நினைக்குமா?

வ்யா-அவ:—இரண்டாம் பாட்டு.—(க) "ఆదిత్య వర్ణం తమసః పరస్తాత్ - ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்று கொண்டு த்யேயமாகச் சொல்லுகிற வஸ்துவினுடைய விக்ரஹவைலக்ஷண்யஞ் சொன்னார் முதற்பாட்டில்; அந்த த்யேய வஸ்துவின் பக்கல் பிறக்கும் பரபக்தி தொடங்கி ப்ராப்யாந்தர்க்கதமா யிருக்கையாலே தத்விஷயபக்தியே யமையுமென்கிறது இரண்டாம் பாட்டில். முதற்

(க) புருஷஸூக்தம்.

பாட்டில் வடிவழகும் மேன்மையும் நீர்மையுஞ்சொல்லிற்று; அவை கர்மஜ்ஞாநங்களி னுடைய ஸ்த்தாநேயாய் நிற்க, அநந்தரம் பிறக்கும் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளைப் பெறும்பேற்றுக் கவ்வருகில்லாத ப்ராப்யங்களென்கிறூர். ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தாநத்தி லவனுடைய வடிவழகும் மேன்மையும் நீர்மையுமாக, அநந்தரம் பிறக்கும் பரபக்த்யாதிகளையிறே உத்தேச்யமாகச் சொல்லிற்று. அந்த ஜ்ஞாநகர்மங்களி னுடைய ஸ்த்தாநத்திலே நிற்கிறவற்றை யநுபாஷிக்கிறூர். "உலகுபடைத்துண்ட வெந்தையறை கழல் சுடர் பூந்தாமரை" என்கிற விவ்வளவிலே.

வ்யா.— (உலகு படைத்துண்ட) (க) "బహుస్యాం- பஹுஸ்யாம்" என்கிறஸங்கல்ப மாத்ரத்தாலே ஸ்வவ்யதிரிக்தஸமஸ்த வஸ்துக்களையு முண்டாக்கி, உண்டான விவற்றுக்குப் ப்ரளயாபத்துவர, இவற்றையடைய வயிற்றிலேவைத்து ரக்ஷித்துப்பண்ணின வ்யாபாரத்தாலேகண்ணழிவற்ற மேன்மை சொல்லுகிறது. (எந்தை) ஸ்வாமித்வப்ரயுக்தமான மேன்மையை யுடையனு யிருந்து வைத்து, எத்தனையேனும் தம்மைத்தாழ நினைத்திருந்தபடியாலே, தம்மை விஷயீகரித்தவத்தால் வந்த நீர்மை சொல்லுகிறூர். "மூவுலகளந்த" இதினுடைய வெல்லை தாமாக நினைத்திருக்கிறூர். (அறை) த்வநியா நின்றுள்ள வீரக்கழலை யுடைத்தாய், அத்யுஜ்ஜ்வலமாய் நிரதிசய போக்யமாயிருக்கிறதிருவடிகளை. இத்தால் அழகு சொல்லுகிறது. (தாமரை சூடுதற்கு) தாமரைபோலே யிருக்கிற திருவடிக ளென்றவாறே (உ) "కదా పునః-கதாபுந:" என்னவேண்டி யிருக்குமிறே. (சூடுதற்க வாவாருயிர்) அத்தலையில் வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்தால் அவன் பக்கல் ருசிபண்ணியல்லது நில்லானிறேசேதநன். (சூடுதற்க வாவாருயிர்) சூடுகையிலே அவாவியிருக்கிற, ஆருயிர் - ஆசைப்படுகிற வாத்மவஸ்து. (உருகியுக்க) அத்தலையில் வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்தவாறே அச்சேத்யமான வாத்மவஸ்து த்ரவத்ரவ்யமாய் ஓரவயவியாக்கிக்காண வொண்ணுதபடி மங்கித்தாயிற்று. (நேரிய காதல்) அந்த அவாவானது விலக்ஷணமானதொரு ஸங்கத்தையும்

(க) சாந்தோக்யம். சு. உ.
(உ) ஸ்தோத்ர ரத்நம்.

பிறப்பித்தது. (க) "ஸங்காத்ஸஞ் ஜாயதே காம:" அந்தஸங்கந்தானொருஅன்பைப்பிறப்பித்தது (உ) "த்ருவா நுஸ்ம்ருதி:" இத்யாதிகளை நினைக்கிறது. விஷயம் குணாதிகவிஷய மாகையாலே அந்த வன்பிலே ஓரின்புண்டு - இனிமை; அதென்பட்டது? அதுதானினிதா யிருக்குமிறே. து:காத்மகமான விஷயத்தைப்பற்றி வந்ததன்றிக்கே (ங) "ஸுஸுகம்கர்த்துமவ்யயம்" என்கிறபடியே ஸ்மர்த்தவ்ய விஷயத்தினுடைய ரஸ்யதையாலே இதுதானே ரஸிக்குமிறே. அதுதானென்போல வென்னில், (ஈன்தேறல்) அம்ருதஸமுத்ரத்தில் கடைந்தவம்ருதம்போலே போக்யமாயிருக்கும் விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தாலே. அதுதான் (ச) "ஆநந்தமய:" என்கிற விஷயத்தைப்பற்றிவருகையாலேஒருரஸஸாகரமாயிருக்குமிறே; விலக்ஷணவிஷயமாகையாலுமிவனுடையருசியாலும் ஒருகடலிலேஏகாகி விழுந்தாற் போலேயிருக்குமிறே. (அமுதவெள்ளத்தானும்) இன்பவெள்ளத்திலே உளனாகையாகிற. (சிறப்புவிட்டு) இந்தப் பரமபக்திகளையுடையனாகையாகிறதிறே ஐஶ்வர்யம். அத்தைவிட்டு, (ஒருபொருட்கு) இத்தைவிட்டா வினிப்பெற நினைப்பதுஇவ்வருகேசிலவைவிறே. அவையாகிறன-தர்மார்த்தகாமமோக்ஷங்களில் சொல்லுகிறவைவிறே; அவற்றையொன்றாக நினைத்திராத அநாதரந்தோற்ற ஒருபதார்த்தமென்கிறார். (அசைவோரசைக) அவைதானிதுபோலே ஸுலபமா யிராது. யத்நித்துப் பெறவேண்டுமதாய், பெற்றால் ப்ரயோஜநமல்பமாயிருக்கும். அவற்றுக்காசைப்படுவார் அங்ஙனே க்லேசப்படுக. (ரு) "க்லேசோதிகதர:" என்கிறபடியே நிரூபித்தால் து:காத்மகமென்றாலும்நாட்டிலே சிலபுருஷர்கள் அவற்றை விரும்பா நின்றார்களேயென்ன; அறிவுகேடர்படியோ? நான் சொல்லுகிறது; புத்திமான்களிவற்றை ஸ்வீகரிப்பதாகமநோரதிப்பார்களோ? (திருவொடுஇத்யாதி) ஐஶ்வர்யம் நிலைநின்று அதுதானே யாத்ராயா யிருப்பது. இத்தாலும் பலமில்லையிறே

(க) கீதை. உ. சுஉ.
(உ) சாந்தோக்யம். எ. உசு.
(ங) கீதை. கூ. உ.
(ச) தைத்தி. ஆநந்த. ரு.
(ரு) கீதை. கஉ. ரு.

போக்தாவுக்கு சக்திவைகல்ய முண்டாகில். அவனுமொருநாளு மழியாத மிடுக்கை யுடையனுவது, ஐஶ்வர்யந்தான் ப்ராதேசிக மாவதன்றிக்கே த்ரைலோக்யமும் விஷயமாவது, இத்தோடேயடுத்து. (நல்வீடு பெறினும்) நல்வீடென்று - உத்தம புருஷார்த்தத்தைச் சொல்லுகையாலே, நடுவில்கைவல்ய புருஷார்த்தத்தைச்சொல்லிற்றுகிறது. இதுதான் பெறக்கடவ தென்றிருக்கையன்றிக்கேஇதிலே தோள்மாறும்படியானுலும். (கொள்வதெண்ணுமோ) இவை ஸ்வீகரிக்கக் கடவதான மநோரத ஸமயத்திலேதானுண்டோ ? ஐஶ்வர்யம் அஸ்த்திரமாகையாலே கழியுண்டது ; ஆத்மலாபம் பரிச்சிந்நமாகையாலே கழியுண்டது; பகவத்புருஷார்த்தம் ஆசைப்பட்ட வுடம்பை யொழிய வேறேருடம்பைக் கொண்டு போயநுபவிக்குமதாகையாலே கழியுண்டது; அவ்வுடம்போடே யிருக்கச்செய்தே பெறக்கடவதான பரபக்த்யாதிகளோடிவை † யொவ்வாதே நிற்கிறவிடம் விசாரவிஷயமோ? ஆனுலுஞ் சிலபேர் நினையாநிற்கிறுர்களே யென்னில், (தெள்ளியோர் குறிப்பு எண்ணுமோ) ஸாராஸாரவிவேகம் பண்ணியிருப்பார்க்கு மநோரதத்துக்கு விஷயமல்ல; ஸாராஸார விவேகஜ்ஞர் நல்லதுக்கும் தீயதுக்குந் தாமிட்டுப் பிறந்திருப்பர்கள். (க) "సారాసారవివేకజ్ఞః గరీయాంసః - ஸாராஸாரவிவேகஜ்ஞஃ கரீயாம்ஸஃ" (உ) "கூடுமாசை" இத்யாதி. உ.

அரு இரண்டாம்பாட்டு:—(உலகு) ததர்த்தமினிதாகை, "அமுதவெள்ளத்தானுஞ்சிறப்பு" என்றுகைங்கர்யாந்தஞ் சொல்லுகையாலேதச்சேஷதைகரஸனுயிருக்கை. "அறைகழல்" என்றுசப்தியாநிற்கிற வீரக்கழலேச்சொல்லி, அதுஆஶ்ரிதர்க்காகவே நிரம்பக்கோத்து ஜயத்துக்கிட்டதாகையாலேஸௌசீல்யமென்கிறது. அந்த ஆதரத்திற் பிறக்கையாலே, அது அந்தக்கைங்கர்யாபிநிவேஶத்தாலே த்ரவீபூதமாயிருக்கிற வாத்மாவிலே உண்டான பக்த்யங்குரமான ஸங்கமென்றபடி. ஆக, ஆத்மாவும், அதிலேயுண்டான பரிவாகிற பக்தியும், இப்படி முற்றின பக்தியாலே சிதிலமாகாநிற்கிற கரணங்களை ஸுகத்தை விளைக்கும் விஷயங்களென்கிறது. இந்தக்கரண சைதில்யத்தாலே பிறந்த வாநந்தத்தாலே "ஈன்தேறல் அமுதவெள்ளம்" என்கிறது. இங்கு இன்பு சப்தத்தாலே கரணசைதில்யஞ் சொல்லுகிறது. இத்தை அருளிச்செய்கிறுர் (அதாவதிப்பரிவு) இத்யாதி. அந்த விஷயாநுபவ ஸுகமாவது கரணசைதில்யா வஸ்த்தையிலே பிறந்த ஸுகம். பகவத்விஷயத்திலும்

† (பா) ஒவ்வாதென்றவிடம்.

(க) வே-ஸம்.

தத்விஷய கரண சைதில்யமே ஸுகமாயிருக்கு மென்றபடி. அன்றிக்கே, "ஈன்" என்றத்தைக் கீழேகூட்டி, "இன்பு" என்றத்தை மேலேகூட்டி, ஆத்மாவிலும் ஸங்கத்திலும். "ஈன்" பிறந்த, "இன்பத்தேற லமுதவெள்ளம்" என்று - இப்படி மூன்றுவிதமான பக்தியிலுண்டான ஸுகமாகிற அமுதவெள்ள மென்னுதல். இத்தை அருளிச்செய்கிறார் (இன்பென்கிற பதத்தை) இத்யாதி. இங்கு - இன்பு சப்தத்தாலே இருந்தபடியே ஸுகம். இத்தால் பக்தியாலுண்டான ஸுகவெள்ள மென்றபடி. தாமரை சூடுதற்குத் தொடங்கி இவ்வளவாகக் கைங்கர்யாபிநிவேசமுடைய ஆத்மாவுக்கு பகவத் விஷய பக்த்யவஸ்த்தையி லுண்டான ஆநந்தஸாகரத்தைச் சொல்லுகிற தென்று பலிதம். தர்மார்த்தாதிகளு மிருக்க இதிலே ஸத்தையுண்டாகை யாவ தென்னென்ன அருளிச்செய்கிறார் (ஆத்மாவுக்கு) இத்யாதி வாக்யத் வயத்தாலே. (க) "நின்கள்வேட்கை யெழுவிப்பவன்" என்று விமுகனாயு மபிமுகராக்க நினைக்கிறவர் துஃகப்படவமையு மென்று கைவிடக்கூடுமோ வென்னஅருளிச்செய்கிறார் (சேதநராய்) இத்யாதி. "நல்வீடு" என்று ஸ்வார்த்தமான பகவத் ப்ராப்தி பக்ஷத்தில் "மாயாப்பெருவிறல்" என்று கைவல்யத்தைச் சொல்லுகிறது. "தெள்ளியோர் குறிப்பு" அவன் விஷயமான பக்தியிலுண்டான ஆநந்தத்தைவிட்டு இவற்றை எண்ணுமோவென்றுக்ரியை.

தாத்பர்யம்:—இதில், கீழ் பாசுரத்தி லருளிச்செய்த ஸர்வேச்வரனுடைய விலக்ஷண விக்ரஹ விஷயகமான பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளே ஸகலபுருஷார்த்தங்களினும் சிறந்தவை யென்கிறார்.

ஸகலஜகத்தையும் தன்ஸங்கல்பத்தினால் ஸ்ருஷ்டித்து, அதற்கு நேரிடும் ப்ரளயாத்யாபத்துக்களை யெல்லாம் போக்கி ரக்ஷிக்கவல்ல ஸர்வேஶ்வரனுடைய இம்மேன்மையையும், இப்படி பரத்வ சீலனாயினும் தன்னுடைய மேன்மையைப்பாராதே, அத்யந்த ஹீநனான என்னையும் விஷயீகரித்த இந் நீர்மையையும், அத்யுஜ்வலமாய், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக வீரக்கழல்பூண்டு, கமலகுஸுமம்போ லதிஸுகுமாரமானதிருவடிகளின் ஸௌந்தர்யவிசேஷத்தையும்அநுஸந்தித்து அவற்றிலேமக்நசித்தராய் அத்திருவடிகளைத்தன் சென்னியிற்சூடவிருப்ப முள்ளவராய், அதப்போதே கிடையாமையாலே சிதிலாந்தஃ கரணராயிருந்து, இவ்வாசை முற்றி பரபக்தி தொடக்கமாகப் பரமபக்தியளவாகப்பரிணமித்து, அந்தபக்தி ரஸமாகிய அம்ருதஸாகரத்தில் மூழ்கி ஸகலஸம்ஸாரதாபங்களையும் போக்கிக்கொண்டு மஹாநந்தாநுபவதத்பரராயிருக்கு மிருப்பைவிட்டு, சில அஜ்ஞர்கள் தர்மார்த்த காமமோக்ஷங்களாகிய நால்வகைப்பட்ட புருஷார்த்தங்களிலொன்றை விரும்பி பஹுயத்நப்பட்டு லபித்து அதற்கு மேலொன்றை யறியாமல் அவ்வளவிலேயே த்ருப்தியடைந்திருப்பர்கள். ஸாராஸாரவிவேக சதுரரான புத்திமான்கள், அப்புருஷார்த்

(க) திருவிருத்தம். கஅ.

தங்கள் வருந்திப்பெறத் தக்கவைகளென்றும், அவற்றில் தர்மார்த்த காமங்கள்அல்பாஸ்த்திரங்களென்றும், கைவல்யஸுகம்அளவுபட்டதென்றும், பகவத்ப்ராப்தியிலுண்டாகும் ஸுகத்துக்கு இத்தோஷங்களில்லாவிடிலும் அது இச்சரீரத்துடனிருக்கு மிருப்பில் நேரிடாததாகையாலும் அவற்றையெல்லாம் விட்டு, இச்சரீரத்துடனே அநுபவிக்கத்தக்கதாய், அபரிச்சிந்நமாய், ஸுஸ்த்திரமாய், ஸுலபஸாத்யமாய், பரமபோக்யமாயிருக்கிற பக்திரஸத்தையே ஸர்வகாலமு மநுபவித்தாநந்திப்பர்கள். உ.

குறிப்பில் கொண்டு நெறிப்பட, உலகம்
மூன்றுடன் வணங்கு தோன்று புகழாணை,
மெய்பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வ னாகிச், சுடர்விளங்ககலத்து,
வரைபுரை திரைபொரு பெருவரை வெருவுற,
உருமுர லொலிமலி நளிர்கடற் படவர
வரசுஉடல் தடவரை சுழற்றிய, தனிமாத்
தெய்வத் தடியவர்க் கினிநா மாளாகவே
இசையுங்கொல், ஊழிதோ றூழி யோவாதே. ந.

அர்த்தம்:—மூன்றுஉலகம்-மூன்றுலோகங்களும், நெறிப்பட-நல்வழியிலகப்படும்படி, குறிப்பில்கொண்டு-திருவுள்ளத்தில் ஸ்வீகரித்து, உடன்-(அம்மூவுலகங்களும்) ஒருபடிப்பட்டு, வணங்கு-ஆஶ்ரயிக்கும்படி, தோன்று - ப்ரஸித்தமான, புகழ்-கீர்த்தியையுடையனாய், ஆணை-செங்கோலை, மெய்பெற-யதார்த்தமாக(தடையின்றி), நடாய-நடத்து மவனாய், தெய்வம் மூவரில்-ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களிலும்,முதல்வனாகி-ப்ரதாநனாய்,சுடர் - தேஜஸ்ஸு; விளங்கு-ப்ரகாசியாநின்ற, அகலத்து-திருமார்பையுடையனாய், வரைபுரை - மலையோடொத்த, திரை-அலைகள், பொரு-பொராநின்ற (அலையாநின்ற) தாய், பெருவரை-பெரியபர்வதங்கள், வெருவுஉற - பயத்தையடையும்படி (பயப்படும்படி), உருமுஉரல் - இடிபோன்ற கர்ஜநத்தை அடைந்திருக்கிற, ஒலி - கோஷமானது, மலி-ஸம்ருத்தமாயிருப்பதான, நளிர்-குளிர்ந்த, கடல்-ஸமுத்ரத்தை, படம்-படங்களையுடையனாய், அரவு-ஸர்ப்பங்களுக்கு, அரசு - ராஜாவாகியவாஸுகியினுடைய,உடல்-சரீரத்தை, தடம்-விசாலமாகிய, வரை-(மந்தர)பர்வதத்தில், சுழற்றிய-(சுற்றிக்)கடைந்தவனாய்,தனி-அத்விதியனாய், மாத்தெய்வம்-பரதேவதையானஸர்வேஸ்வரனுக்கு,அடியவர்க்கு - தாஸரானஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, இனி-இனிமேல்,நாம்-நாங்கள், ஊழிதோறூழி-ப்ரதிகல்பங்களிலும், ஓவாது-இடைவிடாமல், ஆளாக - தாஸபூதராம்படி, இசையுங்கொல்-நேரிடுமோ? ௩.

அவ.—மூன்றாம்பாட்டு. (குறிப்பித்யாதி) முதலிட்டிரண்டு பாட்டில், அதில் முதற்பாட்டில் அவன் வடிவழகைப் பேசியநுபவித்தார்; இவன் றன்னைப்பெற்றநுபவித்துக்கொண்டிருக்கு மிருப்பில் அவன்விஷயமாகப் பண்ணும் பக்தியே யினிதென்றாரிரண்டாம் பாட்டில்; இப்பாட்டில், பக்திபண்ணும் விஷயத்துக் கெல்லை யெவ்வளவென்னில், அவன் தொடங்கி, ததீயசேஷத்வ பர்யந்தமாகவென்கிறது.

வ்யா.—(குறிப்பில் கொண்டு நெறிப்பட உலகம் மூன்றுடன் வணங்கு தோன்று புகழாணை மெய்பெற நடாய தெய்வம் மூவரில் முதல்வன்) என்று-இவனோடே அந்வயித்தல். (நெறிப்படக் குறிப்பில் கொண்டு) (க) "ப³ஹு ஸ்யாம் - பஹுஸ்யாம்" என்று ஸங்கல்பிக்கிற படியே அரும்பும்படி திருவுள்ளத்திலேகொண்டு. ஸ்வவ்யதிரிக்தஸமஸ்த வஸ்துக்களும் நெறிப்படும் படியாக-வழிபடும் படியாகத் திருவுள்ளத்திலே கொண்டு என்றுமாம். இப்படி நெறிப்படுவார் சிலராய் சிலரன்றிக்கே யிருக்கையன்றிக்கே, (உலகம் மூன்று) தன்னை யொழிந்தா ரடையத்தன்னை யாஶ்ரயிக்கும்படியாக. அது தன்னிலந்யோந்ய மாஶ்ரயிப்பாரும் ஆஶ்ரயணீயருமாகிற வைஷம்யமுண்டேயாகிலும் தன்னளவிலே வந்தால் எல்லாரு மொக்கக்கூடித்திருவடிகளிலே யாஶ்ரயிக்கும்படிக்கீடாக. (உடன்வணங்கு) தனித்தான போதாயிற்று அவாந்தரவிஷயமுள்ளது. இவன்பக்கலிலே எல்லாரும் கூடித் திருவடிகளிலே யாஶ்ரயிப்பர்கள். இத்தால் வந்தப்ரஸித்தி கிடந்தவிடந்தெரியாதபடி யொருமூலையிலே யடங்கிக்கிடக்குமோவென்னில், (தோன்று புகழ்) ஶ்ருதிப்ரஸித்தம். (ஆணைமெய்பெறநடாய) ஆஜ்ஞையைப்பத்தும் பத்தாகநடத்தா நிற்பானுமாய். (தெய்வம் மூவரில் முதல்வனாகி) அன்றிக்கே, இவர்களும் தன்னோடு ஸமாநராய் "அவனோ? ஈஸ்வரன்; இவர்களோ? ஈஶ்வரர்கள்" என்று கண்டார்க் கிவர்கள் பக்கலிலேயு மீஶ்வரத்வசங்கை பண்ணும்படியிறே தானிவர்களுக்குக் கொடுத்துவைக்குந்தரம். ஆகையாலே "நடாயதெய்வம்மூவர்" என்று இவர்களோடே அந்வயிக்கவுமாம். (மூவரில்முதல்வனாகி) தன்னை யொழிந்த விருவரளவில் அவர்களுடைய சரீரத்துக்கு மாத்மாவுக்கும் நியாமகனாய், தன்னளவில்

(க) சாந்தோக்யம்-௬-௨.

அஸாதாரண விக்ரஹத்தோடேநின்று அதுக்கு நியாமகனாய். அன்
றிக்கே இந்த்ரனையுங்கூட்டி மூவரென்னவுமாம். (சுடர்விளங்ககல
த்து) ஆபரணசோபையை யுடைத்தான திருமார்பை யுடையனாய்.
அன்றிக்கே சந்த்ரஸூர்யர்களாலே விளங்காநின்றுள்ள வாகாசத்தில்
பாழ் தீரும்படியாக வென்னுதல். (வரைபுரையித்யாதி) அவனா
ஸ்ரிதார்த்தமாகச் செய்யுஞ்செயல்களிலிதொன்று மலையாதோ?
இவனே ஆஸ்ரயணீய னென்னுமிடத்துக்கு. (வரைபுரைதிரை) மலை
யோ டொத்ததிரை. அவை மலையும் மலையுந் தாக்கினாற்போலே
தன்னில்தான் பொருகிறபோது. (பெருவரை வெருவுற) குலபர்வ
தங்கள் நடுங்க. (உருமுரலொலி) அப்போது உருமுஇடித்தாற்போ
லேயிருக்கிற த்வநியானதுமிக. (நளிர்கடல்) பொறியெழக்கடையச்
செய்தேயும் அவனுடைய கடாக்ஷமாத்ரத்தாலே கடல்குளிர்ந்தபடி.
குமுருதபடி நடுங்கவென்னுதல். (படவரவரசு) ஒருசேதநனைப் பற்
றிக் கடையச்செய்தேயும் ஒரு நலிவின்றிக்கேயிருக்கையில் ஸ்வஸ்பர்
சத்தால் வந்த ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் படத்தைவிரிக்கிற, அரவர
சுண்டு - வாஸுகி, அதினுடைய உடலைச்சுற்றி. (தடவரை) கடலைக்
கண்செறியிட்டாற்போலேயிருக்கும் மந்தரபர்வதத்தைக் கொடுபுக்
குநட்டு. (சுழற்றிய) கடல்கலங்கிக் கீழ்மண்கொண்டு மேல்மண்ணெ
றிந்து அம்ருதம் படுமளவும்செல்ல. தொட்டார்க்கெல்லாம் நான்
கடைந்தேனென்று சொல்லலாம்படி தானே சுழன்று வரும்படியாக
வாயிற்று கொடுபுக்குவைத்த நொய்ப்பம். (தனிமாத்தெய்வம்) அத்
விதீயபரதேவதை. இப்படி அத்விதீய பரதேவதைக்காளாகவோ
வாசைப்படுகிறதென்னில், (அடியவர்க்கு) ப்ரயோஜநாந்தர பரரான
தேவதைகளுக்காகத் தன்னுடைய உடம்புநோவக் கடலைக்கடைந்து
அம்ருதத்தைக்கொடுத்த மஹோபகாரத்தையநுஸந்தித்து அவன் நீர்
மையிலே தோற்றெழுதிக்கொடுத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு.
(இனிநாம்) ஆத்மஸத்தையுள்ளவன்று தொடங்கி பாகவதசேஷமாய்
ப்போருவது ப்ராப்தமாயிருக்க, கர்மத்தாலே "நான்" என்றும்
"என்னது" என்றும் போந்தோம்; இனி சேஷித்த காலமாகிலு
மிவ்வஸ்து பாகவத சேஷமென்னு மிடத்தை யவன் காட்ட அவன்
ப்ரஸாதத்தாலேகண்ட நாம். அவர்களோடொப்பூணாய் ஒத்ததர
மாகவோ வென்னில், (ஆளாக) சேஷ பூதராக. அவர்களுக்கு
மாளாய் "நான், எனக்கு" என்றிருக்கு மிருப்புங்கலந்து செல்லவோ.

வென்னில்,(ஆளாகவே) ஆளாந்தரமன்றிக்கே சேஷத்வமேவடிவாக. (இசையுங்கொல்) அவன் (க)ஆள்பார்த்துழிதருவானுகையாலே இவ் வர்த்தத்திலிவனே இப்போதாக விசைவிக்கவேண்டா, "இவர் எப் போதோ?" என்றுப்ரார்த்திக்கிருராகையாலே இவர்க்கிசைவுண்டு. "இசையுங்கொல்" என்பானென்னென்னில்;பாகவதசேஷத்வமாகை யாகிறதுகூடுவதொன்றல்லாமையாலே கூடாதவர்த்தமிங்ஙனே கூட வற்ருே? வென்கிருர். இதுதான்சிலகாலமாய்க்கழி யவொண்ணுது. (ஊழிதோறாழி) கல்பந்தோறுமாகவேணும். அதுதன்னிலும், (ஓவா தே ஒருக்ஷணமுமிடைவிடாதே யாகவேணும். அவாப்தஸமஸ்தகாம ஞய், ஸ்ரிய:பதியாய், (உ) *அயர்வறுமமரர்களதிபதியான ஸர்வேஸ் வரன் ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்காகத் தன்னைப்பேணுதே இங்கேவந்தவதரித்த விடத்து துஷ்ப்ரக்ருதிகளான சிசுபாலாதிகள் அதுபொறுக்கமாட்டாமேமுடிந்துபோனுற்போலே, இப்போதுபாக வதர்களுடைய பெருமையறியாதே "இவர்களும் நம்மோடொக்க அந்நபாநாதிகளாலே தரியாநின்ருர்களாகில் நம்மிற் காட்டில் வாசி யென்" என்று ஸஜாதீயபுத்திபண்ணி ஸம்ஸாரிக ளநர்த்தப்படுகிற படி. ‡(கண்டு) அவதரித்தஸர்வேஸ்வரன் இதரஸஜாதீயனுமன்றிறே இவர்களும் ஸம்ஸாரிகளோடு ஸஜாதீயராவது. ந.

அந.—மூன்ரும்பாட்டு.— (குறிப்பில்) ஈஸ்வராஜ்ஞையை ஸ்ருஷ்டி ஸம்ஹார வ்யாபாரத்தாலே ப்ரஹ்ம ருத்ராதிகளும் நடத்துவர்க னென்ற படி. ஒருபடி ஆளாகக்கிடைக்குமோ வென்னுமல் "இசையுங்கொல்" என்பா னென்னென்ன அருளிச்செய்கிருர் (இசையுங்கொல்) இத்யாதி. ஓவாதே இசையக்கூடுமோ வென்றபடி. ரூ.

தாத்பர்யம்.—இதில், கீழ்ச்சொன்ன பகவத்விஷயகமான பக்தியை அவனடியாரான பாகவதரளவும் செய்கையே சேதநனுக்கு ஸ்வரூபமென் கிருர்.

ஸகலப்ராணிகளும் நல்வழியையடைந்து உஜ்ஜீவித்திடுகவென்று முத வில் ஸங்கல்பித்து தன்னுடைய அப்ரதிஹதஸங்கல்பத்தினுல் இவற்றையுண் டாக்கி, உண்டான இவற்றைத் தன்னுடைய அமோகமான ஆஜ்ஞையினுல் பரிபாலித்து, ப்ரஹ்மருத்ராதியான ஸகலப்ராணிகளும் உயர்ந்தோர் தாழ்ந் தோரென்னும்வாசியறத் தன்னை யாஸ்ரயிக்கும்படியான யச:ப்ரதையை

(க) நான்முகன்திருவந்தாதி-சுo. ‡ குண்டலிதாக்ஷரங்கள் ப்ரக்ஷிப்தம்.
(உ) திருவாய் - க - க - க.

யுடையனாய், ப்ரஹ்மருத்ரேந்த்ரர்களுக்கும் நிர்வாஹகனாய், அத்விதீயபர தேவதையான புருஷோத்தமன், தேவர்களுக்கம்ருதமளிக்கைக்காகத் திருப் பாற்கடலில் பெரியதொரு மந்தரமலையை மத்தாகநாட்டி, ஸர்ப்பராஜனான வாஸுகியைக் கயிறாகச்சுற்றி, அப்போ தக்கடலில் மலைபோன்ற அலைகள் கிளம்பும்படியாகவும், திரைகள்மோதும்போது இடியிடித்தாற்போல் பெரு முழக்கமுண்டாகும்படியாகவும், அப்பேரொலிக்கஞ்சிக் குலபர்வதங்களுங் கூட நடுங்கும்படியாகவும் கடைகையில், ஆஸ்ரிதவத்ஸலனாய்ச்செய்த அவ னுடைய இந்த திவ்யசேஷ்டிதத்தி லீடுபட்டிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபாநுரூபமாகச் செய்யவேண்டுமடிமையையிழந்து இத்தனைகாலமும் எனக்கு வீணாய்க்கழிந்தது. இனியாகிலும் அவர்களிடத்தில் ஸ்வஸஜாதீய புத்தியைப்பண்ணி நசித்துப்போகாமல், ஸர்வகாலமு மவர்களுக்கேயடிமை பூண்டு உஜ்ஜீவிக்கையாகிற இம்மஹாபுருஷார்த்தம்பெறக் கூடும்படி பரம புருஷன் க்ருபைபண்ணியருளுவனோ? வென்று பாகவதசேஷத்வத்தினு டைய அருமையை யருளிச்செய்தார். (௩)

ஊழிதோ றூழி யோவாது வாழிய
வென்றுயான் தொழவிசை யுங்கொல்,
யாவகை யுலகமும் யாவருமில்லா,
மேல்வரும் பெரும்பாழ் காலத்து, இரும்பொருட்
கெல்லா மரும்பெறல் தனிவித்து, ஒருதா
னாகித்தெய்வ நான்முகக் கொழுமுளை
யீன்று, முக்கணீச னொடுதேவு பலநுதலி,
மூவுலகம் விளைத்த வுந்தி,
மாயக்கடவுள் மாமுத லடியே. ௪.

அர்த்தம்.—யாவகை உலகமும் - எவ்வகைப்பட்ட (ஸகல) லோகங்க ளும், யாவரும் - எவ்வகைப்பட்ட (ஸகல) ப்ராணிகளும், இல்லா - இல்லாத படி, மேல் - முன்பு, வரும் - வந்ததான (கழிந்துபோன) பெரும்-தீர்க்கமான, பாழ்-(ஜகத்து) அழிந்துகிடந்த, காலத்து-(ப்ரளய) காலத்திலே, இரும்-விசால (அஸங்க்யேய) மான, பொருட்கு-எல்லாம்-ஆத்மவஸ்துக்களுக்கெல்லாம், பெ றல் அரும் - பெறுகைக்கரியனாய், தனி-ஏகாகியாய் (நிமித்தாந்தரசூந்யனாய்), ஒரு - ஸஹாய (ஸஹகார்யந்தர) மில்லாதவனாய், வித்து - பீஜமாக (உபாதாந காரணமாக), தான்ஆகி - தானேயானவனாய், தெய்வம் - தேவதையாகிய, நான்முகன் - சதுர்முகப்ரஹ்மாவென்கிற, கொழு - பூர்ண (சக்தியுக்த) மான, முளை - அங்குரத்தையும், முக்கண் - மூன்றுகண்களையுடைய, ஈசனொடு - ருத்ரனோடுகூட, பலதேவு - அநேகமானதேவதைகளையும், ஈன்று - உண் டாக்கி, நுதலி - (இவர்களை ஸ்ருஷ்டிஸம்ஹாராதிகளுக்குயோக்யராக) ஸங்

கல்பித்து, மூவுலகம் - மூன்றுலோகங்களையும், விளைத்த - ஸ்ருஷ்டித்த, உந்தி - திருநாபியையுடையனாய், மாயன் - ஆஶ்சர்யபூதனாய், கடவுள் - பரதேவதையாய், மாமுதல் - பரமகாரணபூதனான புருஷோத்தமனுடைய, அடி - திருவடிகளை, ஊழிதோறூழி - கல்பங்கள்தோறும், ஓவாது - இடைவிடாமல், வாழிய - வாழ்ந்திடுக, என்று - என்று, யாம் - நாம், தொழ - ஆஶ்ரயிக்க (மங்களாசாஸநம்செய்ய), இசையுங்கொல் - நேருமா? ச.

அவ:—நாலாம்பாட்டு.—(ஊழிதோறூழி) கீழ்ப்பாட்டில்,பக்தி பண்ணும் விஷயத்துக்கு எல்லை எவ்வளவென்னில், ஸர்வேஶ்வரன் தொடங்கித் ததீய சேஷத்வ பர்யந்தமாக வநுஸந்திக்கை யென்றது. அப்படிப்பட்ட வநுஸந்தாநத்தை யுடையரானார் பரிமாறும் பரிமாற்ற மிருக்கும்படி யென்னெனில், (ஊழிதோறூழியோவாது) வாழிய என்று (க) "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு" என்றாயிற்றிருப்பது. பெரியாழ்வார் "பல்லாண்டு" என்று ஆண்டாக்கி, அது தன்னைப் பலவாக்கி, ஆயிரமாக்கி, அது தன்னைக் கோடியாகப் பெருக்கி மங்களாசாஸநம் பண்ணுகிறார்; இவரவ்வள வமையாமல் முதலிலே கல்பத்தை விவக்ஷித்து அது தன்னை மேல்மேலெனப் பெருக்குகிறார்.

வ்யா:—(ஊழிதோறூழி) கல்பந்தோறும் கல்பந்தோறும். அது தான் நித்யாக்நிஹோத்ர மாகவொண்ணாது, (ஓவாது) ஒருக்ஷணமுமிடை விடாதே. இத்தால், மேலெல்லாங்கூடிச் செய்யப்புகுகிறதென்னென்னில், "வாழிய" என்னுமித்தனை. ஸர்வேஶ்வரனுடைய சேஷித்வத்தை யுபக்ரமித்துத் ததீயசேஷத்வத்தளவுஞ்செல்லவநுஸந்தித்து,அந்த சேஷத்வகாஷ்ட்டா ப்ராப்தியைக்கொண்டு அவன் திருவடிகளுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறது நித்யமாய்ச் செல்லவேணும். (யாம்) (உ) "ஆயுராஶாஸ்தே - ஆயுராசாஸ்தே" என்று கண்டதடைய "எனக்கு"என்று போந்தநாம். இப்போது அது தவிர்ந்து, (தொழ) தொழுகையாகிறது-மங்களாசாஸநம் பண்ணுகையாயிற்று. (இசையுங்கொல்) எனக்கென்று போந்தவது தவிர்ந்து உனக்கென்கையாகிறது நெடுவாசியிறே, கூடாதவிப்பேற்றோடே கூடுவார்க்கு. இப்படி ப்ரார்த்திக்கிறது - அவனுடைய எந்தச்செயலை யநுஸந்தித்தோவென்னில், (யாவகையித்யாதி) முன்பேயுள்ள தொருவஸ்து

(க) திருப்பல்லாண்டு - உ. (உ) யஜுர்.

வுக்கு ஒரு குணாதானம் பண்ணினவளவன்றிக்கே முதலிலே யழிந்துகிடந்த வஸ்துவை அடிதொடங்கி யுண்டாக்கிரமக்குப்பண்ணின மஹோபகாரத்துக்கு. (யாவகை யுலகமும்) இங்ஙனிட்டு மூன்று லோகங்கழிந்து மேலே யொருலோகம்குடிவாங்கக்கடவதாய், அவ்வருகொன்று குடியிருக்கக்கடவதா யிருப்பதொருப்ரளயமுண்டிறே, அப்படி யன்றிக்கே எவ்வகைப்பட்ட லோகங்களும். அன்றிக்கே, (யாவருமில்லா) எல்லாருமொக்க லயிக்கச்செய்தே மார்க்கண்டேயாதிகள் "நித்யத்வம்" என்றலைவாரு முண்டிறே. அங்ஙனுமொருவரின்றிக்கே. (மேல்) மேலென்றது - பண்டென்றபடி. (வரும்) என்றது - போனவென்றபடி. பண்டுபோன. (பெரும்பாழ் காலத்து) கர்ஷகன் உவர்த்தரையை உவர்கழிய நீர்நிறுத்துமாபோலே, விளைக்கு இவற்றினுடைய துர்வாஸனையை யழிக்கைக்காக ஒரு ப்ரஹ்மாவினுடைய ஆயுஸ்ஸித்தனையு மழித்திட்டுவைக்கு மாயிற்று. (இரும்பொருட் கெல்லாம்) தேவ மநுஷ்யாதிரூபமாய், அஸங்க்யேயமாய், அசித் ஸம்ஸ்ருஷ்டங் களுமான ஜீவவஸ்துக்களுக் கெல்லாம். (அரும்பெறல்) இவ்வளவில்வந்து முகங்காட்டுவா னொருவனைக் கிடையாதிறே. ஆகையால் பெறுதற்கரிய. (தனிவித்தொருதானாகி) நிமித்தோபாதாந ஸஹகாரி காரணத்ரயமும் தானேயாய். "வித்து" என் கையாலே, காரணவஸ்துவென்கை. "தனி" என் கையாலே, (க) "ఏకోహవై - ஏகோஹவை" என்று அத்விதீயனென்கை. அன்றியே, எங்களை யுண்டாக்கவேணு மென்றுஅபேக்ஷிக்கைக் கொருவருமில்லை யென்கை. "ஒரு" என்கையாலே, இதுக்குஸஹகாரிகள் ஒருவருமில்லையென்கை. (தானாகி) கார்யரூபமான ப்ரபஞ்சத்துக் கெல்லாம் வேண்டும் காரணகண (X௩) மெல்லாம் தானேயாய். இப்படி யண்டஸ்ருஷ்டியளவும் தானேயுண்டாக்கி இவ்வருகுள்ளவற்றை யுண்டாக்குகைக்காகக், கோயிலுக்கு ஸ்ரீமதுரகவிதாஸனை நிர்வாஹகராக விட்டாற்போலே, ப்ரஹ்மாவை இப்பாலுள்ள ஸ்ருஷ்டிக்காக உண்டாக்கினான். (தெய்வநான்முகன்) இதரஸஜாதீயனான சதுர்முகனாகிற. (கொழுமுளையீன்று) இவ்வருகில் கார்யவர்க்கத்தை யடைய உண்டாக்குகைக் கீடான சக்தியையுடைய ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து. அவனொருவனுமே மூன்றுகார்யமுஞ்

(க) மஹோபநிஷத்.

செய்யமாட்டானே, அதற்காக (முக்கணீசனித்யாதி) ஸம்ஹாரக்ஷமனான ருத்ரனோடேகூட மற்றுங் கார்யத்துக்கு வேண்டும் தேவதைகள் பலரையுமுண்டாக்கி. இவை பலருந்தேவைக்கெல்லாம் அவன் பண்ணின வ்யாபாரமென்னென்னில் (நுதலி) (க) "బహుస్యామ్ - பஹூஸ்யாம்" என்று ஸங்கல்பித்து. "நுதலி" என்றது-கருதியென்றபடி. (மூவுலகம்விளைத்த) கீழும் மேலும் நடுவுமான லோகங்களையுண்டாக்கிற்று அவன்திருவுந்தியாயிற்று. அவனையொழியவே தானே இவையடைய உண்டாக்கிற்றாயிற்று திருவுந்தி. திருவுந்தியென்றொருபத்மமாய், அதடியாகவாயிற்று லீலாவிபூதியடைய உண்டாக்கிற்று. (மாயக்கடவுள்) ஆஸ்சர்ய சக்தியுக்தனான பரதேவதை. (மாமுதல்) பரமகாரணமான மாயக்கடவுளென்னுதல்; மாயக்கடவுளானவனுடைய மாமுதலடியென்னுதல். ஆஸ்சர்ய சக்தியுக்தனான பரதேவதையான பரமகாரணபூதனானவனுடைய திருவடியென்னுதல், "மாயக்கடவுள்" என்று அவனுடைய பரமப்ராப்யமான திருவடிகளென்னுதல். (அடியே வாழியவென்று யாந்தொழ விசையுங்கொல்) (உ) "உன்சேவடி செவ்விதிருக்காப்பு" என்கிறபடியே. ச.

அரு:—நாலாம்பாட்டு.— "இசையுங்கொல்" என்று ஸம்ஶயமென்னென்ன அருளிச்செய்கிறார் (பெறுதற்கரிய) இத்யாதி. பொருள் - பதார்த்தமாய், இரும்பொருள்-சேதநாசேதநங்கள். "மாமுதல்" லோகத்திலே ஒன்று மற்றையதாகமாட்டாது; த்ரிவிதகாரணமுந் தானேயாகையாலே (அத்விதீயம்) என்கிறது. நுதலுகை - நுந்துகையாய், தன்னிலுண்டாக்கி என்றபடி.

தாத்பர்யம்.—இதில், பராத்பரனான பரமபுருஷனுக்கு மங்களாசாஸநம் பண்ணுகையே சேதநனுக்கு ஸ்வரூபாநுரூபமான நித்யக்ருத்யமென்கிறார்.

அவாந்தர ப்ரளயம்போலன்றிக்கே பாதாளாதி ஸத்யலோகாந்தமான பதினாலுலோகங்களும் அவற்றிலுள்ள ப்ரஹ்மாதிகளான ஸகலப்ராணிகளும் மறைந்துகிடந்த அதிதீர்க்கமான மஹாப்ரளயத்தையுண்டாக்கி, அநந்தரம் ஸ்ருஷ்டிகாலத்தில் இஜ்ஜகத்துக்கு உபாதாநமென்றும் நிமித்தமென்றும் ஸஹகாரியென்றும் மூன்றுவகைப்பட்டகாரணமும் தானேயாயிருந்து முதலில் தன்திருநாபியிலிருந்து அண்டத்தையும் அதில் அண்டாந்தர்வர்த்திகளான லோகங்களுக்கு ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மாவையும் அவனையிட்டு ஸம்ஹாரகர்த்தாவான ருத்ரனையும், மற்றுமுள்ள தேவர்களையும் ஸ்ருஷ்டித்து, இவர்களுக்குத்தக்க சக்திகளையுங்கொடுத்து, அத்யாஸ்சர்யசக்தியுக்த

(க) சாந்தோக்யம்-சூ-உ. (உ) திருப்பல்லாண்டு-க.

ஞய், தன்னநுக்ரஹம்பெருத ஸம்ஸாரிகளுக்குத் தானப்ராப்யனுய், பரம காரணபூதனுய், பரதேவதையான பரமபுருஷனுடையதிருவடிகளை மங்களா சாஸநம்பண்ணப்பெருது கழிந்தகாலம்போலன்றி இனியாகிலும் "இத்திரு வடிகள் அநந்தகல்பங்களில் இடையீடின்றி வாழ்ந்திடுக" என்று ஸர்வகால மும் அத்திருவடிகளுக்கு மங்களாசாஸநம்பண்ணும்படியான இம்மஹாபாக் யம் ஸம்பவிக்குமா? வென்று மங்களாசாஸநபரதையைப்ப்ரார்த்திக்கிருர்.௪.

மாமுத லடிப்போ தொன்றுகவிழ்த் தலர்த்தி,
மண்முழுது மகப்படுத்து, ஒண்சுட ரடிப்போ
தொன்று விண்செலீஇ, நான்முகப் புத்தேள்
நாடுவியந் துவப்ப, வானவர் முறைமுறை
வழிபட நெறீஇ, தாமரைக் காடு
மலர்க்கண்ணொடு கனிவா யுடையது
மாய், இரு நாயிரு யிரம்மலர்ந் தன்ன,
கற்பகக் காவு பற்பல வன்ன,
முடிதோ ளாயிரந் தழைத்த,
* நெடியோய்க் கல்லது மடியதோ வுலகே. ரு.

அர்த்தம் :—மாமுதல் - பெரிய (ஸகலகாரணவஸ்துக்களுக்கும்) காரண மாகிய உன்னுடைய, அடி - ஸ்ரீபாதமாகிற, ஒன்று - ஒரு, போது - புஷ் பத்தை, கவிழ்த்து - கவிழ்த்து, அலர்த்தி - பரப்பி, மண்முழுதும் - பூமியை யெல்லாம், அகப்படுத்து - ஆக்ரமித்தும், ஒண் - அழகிய, சுடர் - தேஜஸ் ஸையுடையதாய், போது - புஷ்பம்போன்றதான, ஒன்று - மற்றொரு, அடி - திருவடியை, நான்முகன்-சதுர்முகப்ரஹ்மாவாகிற, புத்தேள் - தேவனுடைய, நாடு - லோகம், வியந்து - ஆஸ்சர்யப்பட்டு, உவப்ப - ஸந்தோஷிக்கும்படி யாகவும், வானவர் - (அங்குள்ள) தேவர்கள், நெறீஇ - நல்வழிப்படுகையை, முறை - முறையிடுகிற, முறை - சாஸ்த்ரங்களிற் (சொல்லுகிற)படி, வழிபட - நல்வழிப்படும் (பகவத்ஸமாஸ்ரயணம்பண்ணும்)படியாகவும், விண் - ஆகா சத்தில், செலீஇ - நடத்திவ்யாபிக்கச்செய்தும், தாமரைக்காடு - பத்மவநம், மலர் - மலர்ந்தாற்போலிருக்கிற, கண்ணொடு - திருக்கண்களோடு கூட, கனி- பழம்போன்ற, வாய்உடையதுமாய்-திருப்பவளத்தையுடையவனுமாய், இரு- பரந்த (அநந்தமானகிரணங்களையுடைய), ஆயிரம்நாயிறு - ஆயிரம்ஸூர்யர் கள், மலர்ந்தன்ன - உதித்தாற்போலிருக்கிற, முடி - கிரீடத்தையும், பற்பல - அநேகமான, கற்பகக்காவுஅன்ன - கல்பகவநம்போலிருக்கிற, தழைத்த - வளர்ந்திருக்கிற, ஆயிரம்தோள் - ஆயிரம் திருத்தோள்களையுமுடையவனு

* நெடியோய்க்கல்லதடியதோ என்று பாடாந்தரம்.

மாய், நெடியோய்க்கு அல்லதும் - ஸர்வாதிகனுமான உன்னையொழிந்த மற்றொருவர்க்கும், உலகு - லோகம், அடியதோ - அடிமைப்பட்டதோ? ரு

அவ.—ஐந்தாம்பாட்டு—(மாமுதலடியித்யாதி)"மாமுதலடியே வாழியவென்று யாந்தொழ விசையுங்கொல்" என்றார் கீழ்; நமக்கு மங்களாசாஸநம் § பண்ணப்புக்க உமக்குக் கருத்தென்னென்னில், உறங்குகிறப்ரஜைக்குத் தானறிந்தபடி ஹிதம்பார்க்கும் தாயைப் போலே, நீ பண்ணின உபகாரமறிகைக்கு ஒருவருமின்றியே யிருக்க, அழிந்து கிடந்தவற்றை யடையஉண்டாக்கி, ‡உண்டானவற்றுக்குக் காவலாக திக்பாலாதிகளை யடைத்துவிட்ட வநந்தரம், சிறியத்தைப்பெரியதுநலியாதபடி நீ நாட்டுக்குக்காவலாக நிறுத்தினஇந்த்ரன், † ஒரு ஆஸுரப்ரக்ருதியான மஹாபலிகையிலே ராஜ்யத்தைப் பறிகொடுத்துக் கண்பிசைய, "முதலிலேஇவற்றையுண்டாக்கினோம், அநந்தரமாக இவற்றுக்குக் காவலாக திக்பாலாதிகளைக் கையடைப்பாக்கி நோக்கினோம், ஆகில், இனியவைபட்டது படுகிறன" என்று கைவாங்கியிராதே ஸ்ரிய:பதியான உன்னை யழித்து இரப்பாளனாக்கிக்கொடுத்து, இட்டுவளர்ந்தகையைக்கொண்டுஇரந்துஇந்த்ரன்கார்யஞ்செய்துதலைக்கட்டின செயலொன்றையுமநுஸந்தித்தால் உனக்கன்றிக்கே மற்றையார்க்கோ? மங்களாசாஸநம்பண்ண ¶ வகுப்பது என்று இந்த ப்ரஸங்கத்திலே திருவுலகளந்தபடி ப்ரஸ்துதமாக அத்தைப் பேசியநுபவிக்கிறார். ரு.

வ்யா.—(மாமுதலடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி) (க) [நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப] திருவுலகளந்தருளுவதாக நின்ற போது நின்ற திருவடி அந்நிலையில் (உ) "ஒண்மிதியில் புனலுருவியொருகால் நிற்ப" என்கிறபடியே ஆவரண ஜலத்துக்குட்பட்டத்தை யடையத் தன் கீழே யிட்டுக்கொண்டது. வளர்ந்த திருத்தோள்கள் வ்யாபித்து திக்குக்களையளந்துகொண்டன; (க) [அன்று கருமாணியாய்] ஸ்ரிய:பதியான நீ "உண்டு" என்றிட்ட போதோடு "இல்லை" என்று மறுத்தபோதோடு வாசியற ப்ரீதியோடே போம்படியான இரப்பிலேதகணேறின வடிவை யுடையையாய்க்கொண்டு

---

§ (பா) பண்ணவடுப்பதுமக்கு.
‡ (பா) உண்டாக்கினவற்றுக்கு.
† ஒரு என்றபதம்க்வாசித்கம்
¶ (பா) அடுப்பது.
(க) உ - ம் திருவ-௬௧.
(உ) திருநெடுந் - ரு.

இரந்து உன்படி யொருவர்க்குந் தெரியாதபடி மறைத்து வர்த்திக்கிறவனே! நீ இச்செயல் செய்தது இந்த்ரனொருவ னுடைய வபேக்ஷிதஞ் செய்கைக்கன்றிறே; "ஆரேனுமாகத் தன் திருவடிகளிலே தலை சாய்த்தார்க்காகத் தன்னையழிய மாறியும் கார்யஞ் † செய்வானொருவன்" என்று உன்படியை யநுஸந்தித்து ஆஸ்ரிதர் மார்விலே கைவைத்துறங்குகைக்காகச்செய்த செயலிறேயிது. கீழ்ச்சொன்னபடியே "மாமுதலடிப்போது" என்று பரமகாரணமானவனுடைய திருவடியென்னுதல்; அன்றிக்கே "மாமுதலடிப்போது" என்று திருவடி தனக்கேயாய், சேஷபூதரடையவந்து சேருவது திருவடிகளிலேயாகையாலே அவர்களுக்குப் பரமப்ராப்யமான திருவடியென்னுதல். "அடிப்போது" என்றது-அடியாகிற செவ்விப்பூவென்றபடி. ‡ (அடி - திருவடி) திருவடியாகிற செவ்விப்பூவை. (கவிழ்த்தலர்த்தி) திருவடியைப் பரப்பி எல்லாவற்றையுமளந்துகொள்ளுகிறவிடத்தில் சிறியதின் தலையிலே பெரியது இருந்தால் சிறியது நெருக்குண்ணக்கடவது; அப்படியே திருவடியின் கீழ்ப்பட்ட பதார்த்தங்கள் நெருக்குண்டதில்லையோ வென்னில், ஒரு செவ்வித் தாமரைப்பூவைக் கவிழ்த்தலர்த்தினால் அதினுள்ளல்லிக்குள்ள நெருக்கிறே திருவடியின்கீழ்ப்பட்ட பதார்த்தங்களுக்குள்ளது. (க) "ஒண்மிதி" என்னக்கடவதிறே. (மண்முழுது மகப்படுத்து) (க) "புனலுருவி" என்கிறபடியே ஆவரண ஜலத்துக்குட்பட்டதடையத் தன் கீழேயிட்டுக்கொண்டு. இதுவாகிலித் திருவடி செய்தது, மற்றைத்திருவடி செய்ததென்னென்னில், (ஒண்சுடரடி) (க) "ஒருகாலும் காமருசீர் §" என்று தொடங்கிமேற் சொல்லுகிறபடியே மேலுள்ள லோகங்களடைய வளந்துகொண்டது. (ஒண்சுடரடிப்போ தொன்று) மநுஷ்யர்களெல்லார்க்குமுள்ள தர்மாநம் இந்த்ராதிகளிலோரொருவர்க்கு முண்டாயிருக்கும்; அப்படிப்பட்டவர்களை யடைய பக்ஷாபிமாந ராக்கிக்கொள்ளுகையாலே வந்த புகரை யுடைத்தாயிருக்கை. அழகிய சுடரையுடைய செவ்விப்பூவாகிற ஒரு திருவடி. (விண்செலீஇ) விண்ணையடைய வ்யாபித்தது.

† (பா) செய்யுமொரு ஸர்வேஸ்வரன். (க) திருநெடுந் - டு.

‡ குண்டலிதம்க்வாசித்கம்.

§ ரவுணனுள்ளத்தெண்மதியும் கடந்தண்டமீது போகி யிருவிசும்பினூடு போயெழுந்து என்று இதுவளையில் ப்ரதீகம் சிலகோசங்களில்

எவ்வளவிலே சென்றதென்னில், (நான்முகப்புத்தேள் நாடுவியந் துவப்ப) சதுர்முகனுகிற தேவதையினுடைய லோகமானதித்தைக் கண்டு வியப்பதுஞ் செய்தது. "அந்நீர்மையேறிப் பாயாததொரு மேடுதேடிப் போந்தோமானேம், நீர்மையிங்கே வந்தேறுவதே! இதோராஶ்சர்யமிருந்தபடியென்" என்று விஸ்மயப்படுவதுஞ் செய்தது. "திருவடிகளுக் காகாதாரில்லையாகாதே, அவனுளனுக்க நாமல்லோம், என்றகலப்பார்த்தாலும் அகலவிரகின்றிக்கேயிருந்ததீ! இதொரு அலப்யலாபமிருந்தபடியே!" என்றுகப்பதுஞ் செய்தது. அவ்வளவில் ப்ரஹ்மாசெய்ததென்னென்னில், (க) [குறைகொண்டு நான்முகன்குண்டிகை நீர்பெய்து] நினைவின்றிக்கேயிருக்கத் திருவடி கையிலேவந்திருந்தவாறே அலப்யலாபத்தாலே தடுமாறிச் சுற்றிலே பார்த்தான்; அவ்வளவிலே தர்மதத்வம் நெகிழ்ந்து நீராய்க்குண்டிகையிலேபுக்கிருந்தது; அத்தைக்கொண்டு திருவடியை விளக்கினுன். அவ்வளவில் "இது நமக்கு நல்லவிடம்" என்று சிவன்தன் தலையை மடுத்தான். (உ) "పావనార్థంజటామధ్యేదధారశిరసాహరః - பாவநார்த்தம் ஜடாமத்யே ததாரசிரஸாஹரः" என்று தன்னுடைய சுத்யர்த்தமாக ஜடையிலேதரித்தான். (உ) "యోగ్యోస్మీత్యవధారణాత్ - யோக்யோஸ்மீத்யவதாரணுத்" திருவடிகளுக்கு யோக்யரல்லாதாரில்லையென்றுபார்த்தான். (உ) "వర్షాయుతాన్యథ బహూన్న ము మోచతథాహరః - வர்ஷாயுதாந்யதபஹூந்நமுமோசததாஹரः" என்கிறபடியே நற்சரக்குவந்தால் விடுவாரில்லையிறே. கிடையாதது கிடைத்தவாறே "விடேன்" என்று தலையிலேவைத்துத்திருவடியைக்கட்டிக்கொண்டு நெடுங்காலம் நின்றுன். (ங) [சதுமுகன்கையில் சதுப்புயன்றாளில் சங்கரன்சடையினிற்றங்கி] என்றிறே கங்கைக்குவரலாறுசொல்லுவது. முந்துறப்ராஹ்மாவின் கையிலேயிருந்து, பின்னை ஸர்வேஶ்வரன் திருவடிகளிலேதங்கி, அநந்தரம் ருத்ரன் தலையிலேவந்துவிழுந்தது. இத்தால் ப்ரஹ்மா தான்பெற்றதென்னென்னில், (ச) [தரணிநிமிர்ந்தளப்ப நீட்டியபொற்பாதஞ்சிவந்த தன்கையனைத்துமாரக்கழுவினுன்] அநேகங் கைகளைப்படைத்தத்தா

(க) ஊ-ம் திரு-கூ. (உ) ஈஶ்வரஸம்ஹிதை.
(ங) பெரியாழ்வார் திருமொழி-ச-எ-ரு. (ச) உ-ம் திருவந்தாதி-எஅ.

னுள்ள ப்ரயோஜநம்§பெறும்படி திருவடியைவிளக்கப்பெற்றான். [குறைகொண்டு] தன்னுடையவறுமையை முன்னிட்டுக் கொண்டு. [குண்டிகைநீர்பெய்து மறைகொண்டமந்திரத்தால்வாழ்த்தி] வேதத்திலநந்யபரமான வாக்யங்களைக்கொண்டு மங்களாசாஸநம்பண்ணி. [கறைகொண்ட] "இவன் அவிவேகத்தாலே விளைவதறியாமே அநர்த்தரூபங்களா யிருக்கு மவற்றைச் செய்யா நின்றான், இனி இவனைத்த அமங்களங்கள் வாராதொழிய வேணும்" என்று விஷம ப்ரஜைகள்மேலே தீர்த்தத்தைக் கொண்டு "விநீதனாக வேணும்" என்று தெளிக்குமாபோலே ருத்ரன் ஜடையிலே விழும்படிகழுவினான். இதுவாகிலவன்செயல், † அவ்வவ லோகத்திலுள்ள தேவதைகள் செய்ததென்னென்னில், (வானவர்முறைமுறைவழிபடநெறீஇ) தேவர்கள் நெறிபட்டு பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணும்படியைச் சொல்லுகிற சாஸ்த்ரங்களின் வழியே திரளாக வாஶ்ரயிக்க; திருவணுக்கன் திருவாசலில் திரள்திரளாகப்புக்குத்திருவடிதொழுமாபோலே ஸமாராதநவிதியின்படியே வழிபட்டாஶ்ரயிக்க. அவ்வளவிலவன் செய்ததென்னென்னில், (தாமரைக்காடு இத்யாதி) ஆரேனுமாகத் தன் திருவடிகளிலே தலையை வைத்தால் ஆதித்ய ஸந்நிதியில் தாமரைபோலே திருக்கண் செவ்விபெறுமாயிற்று. தாமரைக் காடலர்ந்தாற்போலே யிருக்கிற திருக்கண்ணோடே கனிந்த வாயையு முடைத்தாயிருப்பதுமாய். (இருநாயிறு இத்யாதி) நாமிங்குக்காண்கிற வாதித்யனைப்போலன்றிக்கே அநேகமாயிரங் கிரணங்களையுங் கீழ்ச்சொன்ன விசேஷங்களையு முடையராயிருப்பார் ஆயிரமாதித்யர்கள் சேரஉதித்தாற்போலேயாய். ¶ பலவான கற்பகச்சோலைபோலேயுமாய், இப்படியிருக்கிறதேதென்னில் (முடிதோளாயிரம் தழைத்த) ஞாயிறாயிரம் மலர்ந்தாற்போலே யிருக்கிறது திருவபிஷேகம். பலவகைப்பட்ட கற்பகச் சோலைபோலே யிருக்கிறது அநேகமாயிரமாய்ப் பணைத்த திருத்தோள்கள். (நெடியோய்க்கு) இப்படி தன்னையழிய மாறியிரந்து அவன் கார்யஞ் செய்து தலைக்கட்டச் செய்தேயும், தன்னை விஶ்வஸித்துடனே கிடந்தவன் முடிய

§ பெறும்படி என்று சில ஸ்ரீகோசங்களில் பாடமில்லை.

† (பா) அவன்லோகத்திலுள்ள.

¶ இங்கு கற்பகக்காவு பற்பலவென்றுப்ரதீகம் சில ஸ்ரீகோசங்களில் காண்கிறது.

விழ்த்தவனைப்போலே யநுதபித்து, "மஹாபலிபோல்வார் நலிவதற்கு முன்னே முற்கோலிநோக்கப் பெற்றிலோம், பறிகொடுத்தோம், பிற்பாடரானோம்" என்று ‡நோக்கிலஜ்ஜித்து ஒன்றுஞ் செய்யாதானாய்த்தன்குறையை நினைத்திருக்கு மவனாயிற்று. (நெடியோய்க்கல்லது மடியதோவுலகே) இப்படி ஸர்வரக்ஷகனான தன்னையொழிய ஜகத்துமற்றுஞ் சிலர்காற்கீழே கிடந்ததோ? § மங்களாசாஸநம்பண்ண. எல்லாரையு மாஸ்ரயிப்பித்துக் கொள்ளுகிறவர்கள் தலைமேலேகாலை வைத்த உனக்கு மங்களாசாஸநம்பண்ண வடுக்குமோ? உன்காலின் கீழே துகையுண்டவர்களுக்கு மங்களாசாஸநம்பண்ண வடுக்குமோ? சொல்லிக்காண். ௫.

அரு:—ஐந்தாம்பாட்டு.—(மாமுதல்)முதலென்றுஸாமாந்யேந காரணஞ் சொல்லுகையாலே, மஹச்சப்தத்தாலே உஜ்ஜீவநகாரணமென்கிறது. போக விட்டென்னவமையாதோ, "செலீஇ" என்பானென்னென்ன அருளிச்செய்கிறார்(அவ்வவலோகம்) இத்யாதி. "உவப்ப" அலப்யலாபத்தாலேஉகக்கவென்னுதல்; நீர்மையினாலே உகக்கவென்னுதல். "வழிபடநெறீஇ" நெறியாலே வழிபட. வழிபடுகை-அடிமைசெய்கை. "இருநாயிறு" இருமை - பெருமையாய், இந்தவாதித்யனை வ்யாவர்த்திக்கிறது. முடியாயிரமும்பலதோள்களும். அடியதோ - உலகு, சேஷமோ, இப்படியவனைக் கேட்பா னென்னென்ன அருளிச்செய்கிறார் (இந்தலோகம்) இத்யாதி. ௫.

தாத்பர்யம்:—இதில், மங்களாசாஸநத்துக்கு நீயேவிஷயமல்லது மற்றொருவர் விஷயமன்றென்று ஸ்ரியःபதியான ஸ்ரீமந்நாராயணனைக்குறித்து விண்ணப்பம்செய்கிறார்.

நீ ஆதியில் ஸகலஜகத்தையும் ஸ்ருஷ்டித்து இதற்கு ரக்ஷகனாக இந்த்ரனையேற்படுத்தினாய். பின்பொருகால் அவ்விந்த்ரனுடைய ஐஸ்வர்யத்தை மஹாபலி கைக்கொண்டான். இந்த்ரன் அதைத் தான்மீட்டுக்கொள்ள அசக்தனாய் உன்னைச் சரணம்புகுந்தான். அப்போது நீ வாமநனாயவதரித்து மஹாபலியிடம் மூன்றடியிரந்து த்ரிவிக்ரமனாய்வளர்ந்து தாமரைபோன்ற திருக்கண்களையும், கனிந்தபழம்போன்ற திருவதரத்தையும், அநந்தகிரணங்களையுடைய அநேகமாதித்யர்கள் உதித்தாற்போல் அத்யுஜ்வலமான திருவபிஷேகத்தையும், கற்பகச்சோலைபோல் திரண்டுருண்டு ஸகலாபீஷ்டப்ரதங்களான ஆயிரம் திருத்தோள்களையுமுடையனாய், தன்திருவடிக்கீழகப்

‡ (பா) என்று நோக்கிற்று.

§ இங்கு—சிலர்காற்கீழே கிடந்தவர்களிலே சிலர்க்கு மங்களாசாஸநம் பண்ணவடுக்குமோ என்று கோசாந்தரங்களில் பாடம் காண்கிறது.

பட்டு ப்ரஜைகள் நெரிந்துபோகாதபடி அவர்கள்தலையில் பூவைக்கவிழ்த்தாற்போல் அதிஸுகுமாரமான ஒரு திருவடித்தாமரையை பூமியெங்கும்பரப்பியாக்ரமித்தும், மற்றொருதிருவடியை ஆகாசத்தில் ப்ரஹ்மலோகத்தளவும் செல்லநீட்டி, அங்கு ப்ரஹ்மலோகவாஸிகள் இவ்வத்யத்புதஸௌசீல்யத்தைக்கண்டு ஆஶ்சர்யப்பட்டு உகந்தாஶ்ரயிக்கும்படியாகவும், மற்றுமுள்ளதேவர்களும் யதாசாஸ்த்ரமாக ஆஶ்ரயிக்கும்படியாகவும் ஆகாசமடையப்பரப்பி ஊர்த்வலோகங்களை யாக்ரமித்தும் இப்படி தன்வசமாக்கிக்கொண்ட பூம்யந்தரிக்ஷஸ்வர்க்கலோகங்களை ஆஶ்ரிதனான இந்த்ரனுக்குக் கொடுத்த மஹோபகாரகனாய், ஸர்வாதிகனான நீயிருக்க, லோகமெல்லாம் உனக்கேயாட்பட்டு ஸ்வரூபாநுரூபமாக மங்களாசாஸநம்செய்யுமல்லது மற்றொருவர்க்காட்படாதென்கிறார். ரு.

ஓ ஓ உலகினதியல்வே, ஈன்றோளிருக்க
மணைநீராட்டிப், படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்து, தேர்ந்துலகளிக்கும்முதற்பெரும்
கடவுள்நிற்பப், புடைப்பலதானறி
தெய்வம்பேணுதல், தனாது
புல்லறிவாண்மைபொருந்தக்காட்டிக்,
கொல்வனமுதலாவல்லனமுயலும்,
இனையசெய்கையின்புதுன்பளித்,
தொன்மாமாயப்பிறவியுள்நீங்காப்,
பன்மாமாயத்தழுந்துமாநளிர்ந்தே. (சு)

அர்த்தம்:—உலகு - லோகத்தை, படைத்து - (ஆதியில்) ஸ்ருஷ்டித்து, இடந்து - (வராஹாவதாரத்தில் அண்டபித்தியில்நின்றும்) குத்தியெடுத்து, உண்டு - (ப்ரளயகாலத்தில்) அமுதுசெய்து, உமிழ்ந்து - (அவாந்தரஸ்ருஷ்டியில்) வெளிப்படுத்தி, அளந்து - (த்ரிவிக்ரமாவதாரத்தில்) ஆக்ரமித்து, தேர்ந்து - (அதற்குமேல் ரக்ஷணோபாயத்தைச்) சிந்தித்து, அளிக்கும் - ரக்ஷிக்கிற, முதல் - பரமகாரணபூதனாய், பெருங்கடவுள் - பரதேவதையான ஸ்ரீமந்நாராயணன், நிற்ப - (ஆஶ்ரயணீயனாக) இருக்க, (அவனைவிட்டு), புடை - (விபூதி) ப்ரகரணங்களிலே (சொல்லப்பட்டனவாய்), பல - பலவகைப்பட்டனவாய், தான் - (ஆஶ்ரயிக்கிற) தான், அறி - அறிந்த, தெய்வம் - தேவதைகளான (சில) வற்றை, பேணுதல் - ஆதரிக்கை, தனாது - தன்னுடைய, புல் - க்ஷுத்ரமான, அறிவு - புத்தியை, ஆண்மை - பெரியோர்கள் (மநதில்), பொருந்த - படும்படி, காட்டி - ப்ரகாசிப்பித்து, ஈன்றோள் - பெற்றவள், இருக்க - இருக்கையில், (இவளையநாதரித்து), மணை - (அசேதநமான) மணை

யை, நீராட்டி - பரிசர்யைசெய்து (கொண்டாடினாற்போலிருக்கிறது.) செய்கை - (அத்தேவதைகளின்) க்ருத்யம், கொல்வனமுதலா - ஹிம்ஸிக்கைமுதலிய, அல்லன - நிஷித்தகர்மங்களை, முயலும் - (செய்ய) யத்நிக்கை யாகிற, இனைய-இப்படிப்பட்டது. அளி - (அத்தேவதைகள் கொடுக்கும்) பலமாவது, துன்பு - துக்கத்தோடுகூடிய, இன்பு - ஸுகம். (ஆகையாலத் தேவதைகளை யாஸ்ரயிக்கை), தொல் - அநாதியாய், மா - பெரிதாய் (போக்கவொண்ணாததாய்), மாயம் - ஆஸ்சர்யகரமான, பிறவியுள் - ஸம்ஸாரத்தில் நின்றும், நீங்கா - நீங்குகையன்றிக்கே, பல் - அநேகவிதமாய், மா - பெரிதாய் (போக்கவொண்ணாததாய்), மாயத்து - மோஹஜநகங்களான சப்தாதி விஷயங்களில், நளிர்ந்து-செவ்வையாக, (து:கித்துக்கொண்டு), அழுந்துமா - அழுந்திக்கிடக்கைக்கு ஹேதுவாகும். உலகினது - லோகத்தினுடைய, இயல்வு - ஸ்வபாவம், ஓ ஓ - ஆஹா ! என்ன ஆஸ்சர்யம் ! ௯.

அவ.—ஆரும்பாட்டு.–(ஓ ஓ வுலகு) இவற்றினுடையஸத்தையை ஸார்த்தமாக உபாதாநம்பண்ணி ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டித்த வநந்தரம் "இனிமேலவைபட்டது படுகிறன" என்றிராதே, சிறியத்தைப் பெரியதுநவிந்து மஹாபலிபோல்வார்பருந்திருஞ்சினாற்போலே யபஹரிக்க, ஸ்ரிய:பதியானவன் தன் மேன்மைபாராதேதன்னையழித்து ரக்ஷித்தசெயலை யநுஸந்தித்து, சேதநராயிருப்பார்க்கு, இவனுக்கு மங்களாசாஸநம்பண்ணி வர்த்திக்கவிறே செய்யவடுப்பதென்றார் கீழே. "இவர்கள்தாங்கள் சேதநரானபின்பு, இதிலே யொருப்படாதொழிவார்களோ?" என்று லௌகிகரைப்பார்த்தார்; அவர்கள்வருந்திக் கைவிடுவதிவனொருவனையுமேயாய், விரும்புகைக்கு மிவனையொழிந்தவையாகவமைந்து, "நான்" என்றும் "என்னது" என்றும், பகவத்வ்யதிரிக்தரை ரக்ஷகராகத்தேடியும் போருகிறபடியைக்கண்டு இதிருந்தபடியென், (க) "ఏకస్మిన్నప్యతిక్రాన్తే ముహూర్తే ధ్యానవర్జితే। దస్యుభిర్ముషితేనేవ యుక్తమాక్రన్దితుం భృశమ్ - ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்தேத்யாந வர்ஜிதே । தஸ்யுபிர்முஷிதேநேவ யுக்தமாக்ரந் திதும்ப்ருசம்" என்கிறபடியே பகவத்த்யாநத்திற்கு விச்சேதம்பிறந்தால் அதுக்குப் பரிஹாரமாகத் திருநாமஸங்கீர்த்தநம் பண்ணுகை, சீரியதநமபஹ்ருதமானால் எல்லாருமறியக் கூப்பிடுமாபோலே கீழ்ப்பிறந்தவிச்சேதத்திற்குக்கூப்பிடக்கடவதிறே. அப்படி தங்களிழவுக்குக் கூப்பிடவேண்டியிருக்க, அவர்களது தானுமறி

(க)

யாதேயிருக்க, அவர்களிழவுபொறுக்கமாட்டாமை தாம் §"ஓ! ஓ!" என்று கூப்பிடுகிறார்.

வ்யா.—(ஓ ஓ) இருந்தாரிருந்த விடங்களிலே செவிப்படும்படிகூப்பிடுகிறார். (உலகினதியல்வே) ஒரு விபூதியாகத் தன்னையநுபவிக்கிற வநுபவத்துக்கு விச்சேதமின்றிக்கே செல்லுகிறாப்போலே இதொருவிபூதி தன்பக்கல் வைமுக்யம் பண்ணும்படி வைப்பதே! இதொரு லோகத்தினுடைய ஸ்வபாவமே! நீரிங்ஙனே "ஓ!" என்றிட்டு நெடுவாசிபடக் கூப்பிடுகைக்கு லோகமாகத் தான் செய்ததென்னென்னில், ஈன்றாளிருக்க மணைநீராட்டியிரா நின்றார்கள். உத்பத்திக்கு முன்னேயுண்டாக்குகைக்கு ஸாதநாநுஷ்ட்டாநம்பண்ணி, பின்னை கர்ப்பத்திலேதரித்து, ப்ரஸவவேதனையையநுபவித்து, அநந்தரம் தண்ணியதரையிலே யிட்டுக்கொடுதுவண்டு நோக்கினால், அறிவுபிறந்து பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்கு மளவானவாறே யவளைவிட்டு, ஒரு உபகாரமும் பண்ணவு மறியாதே இவன்பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்கவு மறியாதே யிருப்பதொரு அசித்பதார்த்தத்தைக் கொண்டாடுவாரைப்போலே வகுத்த விஷயத்தைவிட்டு அப்ராப்த விஷயத்தை யாதரியா நின்றார்கள். நீர் "ஈன்றாள்" என்று தாயாக நினைக்கிறதுதா னாரை யென்னில், (படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து தேர்ந்துலகளிக்கும் முதற்பெருங் கடவுள்) இவையடங்கலும் போகமோக்ஷசூந்யமாய்த் தமோபூதமாய் அசித்கல்பமாயிழந்து கிடக்கிறபோது இவற்றினுடையதசையைக் கண்டு"ஐயோ!"என்றிரங்கி(க)"𑌬𑌹𑍁𑌸𑍍𑌯𑌾𑌂-பஹூஸ்யாம்" என்று ஸ்ருஷ்டித்து,ஸ்ருஷ்டமான வநந்தரம் ப்ரளயங்கொள்ள, நீருக்குஞ் சேற்றுக்குமிறாயாத மஹாவராஹமா யெடுத்து, திரியப்ரளயம் வருமென்றுமுற்கோலி வயிற்றிலேவைத்து,உள்ளேகிடந்து தளராதபடி வெளிநாடுகாணவுமிழ்ந்து, எல்லைநடந்து மீட்டு, இப்படிஸர்வவித ரக்ஷணங்களையும் பண்ணச்செய்தே, பின்னையும், தன்னை விஸ்வஸித்து அருகே கிடந்தவனை மடிதடவினவனைப்போலே யநுதபித்து ஒன்றுஞ் செய்யாதானாய் மேன்மேலன ரக்ஷணோபாயங்களைச் சிந்தித்து. ஒருவரை யிருவரையன்றிக்கே வரையாதே எல்லாரையு மொக்க ரக்ஷிக்கிற அத்விதீய பரதேவதை யானவன். "ஆரோ வருவார்"

---

§ (பா) "ஓ என்று" என்று. (க) சாந்தோக்யம்-௬-௨.

என்று, (க) "ஆஶயா யதிவாராம: - ஆசயா யதிவாராம:" என்கிறபடியே அவஸரப்ரதீக்ஷனாய் நிற்க. † இவ்வோ உபகாரங்களைப் பண்ணிற்றிலனாகிலும் ஆஶ்ரயிக்கைக்கு முட்டுப் பொறுக்கும்அத்விதீயபரதேவதை இவனல்லதில்லை. யயாதி ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணி ஸ்வர்க்கத்திலே இந்த்ரனோடு அர்த்தாஸநத்திலே யிருக்கச்செய்தே, "கர்மபூமியில் புண்யக்ருத்துக்களார்" என்று அவனைக் கேட்க, ஒருதேவதை முன்பே பொய்சொல்லிற்றாக வொண்ணாதென்று "நான் வர்த்தித்தகாலத்தில் என்னையெல்லார்க்கும் மேலாகச் சொல்லுவார்கள்" என்ன, "ஆத்மப்ரசம்ஸை பண்ணினாய், (த்வம்ஸ) த்வம்ஸ" என்று பூமியிலேவிழும்படி சபித்தானென்று. இவ்விடத்தை பட்டர் வாசித்துப் போந்தகாலத்திலே "இந்த்ரன் தன்னை யாஶ்ரயித்துப்பெற்ற உத்கர்ஷமாயிருக்க அர்த்தாஸநத்திலே யிருந்தது பொறுக்கமாட்டாமை 'ஆத்மப்ரசம்ஸை பண்ணினாய்' என்றொரு வ்யாஜத்தையிட்டுத் தள்ளினானாயிருந்தது. 'இது தான் வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான மஹா பாரதத்திலே எவ்வர்த்தத்தினுடைய விசதமாக ருஷியெழுதினான்' என்றுகேட்க, தான் தன்னோடொக்க உத்கர்ஷத்தைக் கொடுக்கவல்லதுவும், அத்தைப் பொறுக்கவல்லதுவும் பரதேவதையானபின்பு ஆஶ்ரயிக்கப் படுமதுவும் பரதேவதை; அல்லாதார் ஆஶ்ரயணீயரல்லர் என்னுமிடம் ப்ரகாசிக்கைக்காக" என்றருளிச்செய்தார். அவனை விட்டால் சுருக்கமொழிய அவனோடு தோள்தீண்டியா யிருப்பாரை யாஶ்ரயிக்கப் பெறினுமாமிறே. (புடைப்பலதானறிதெய்வம் பேணுதல்) ஒரு புடைகளிலே - அர்த்தவாதித்து அவனுடைய விபூதியைப்பேசுகிறவிடத்திலே, அவனுடைய உத்கர்ஷத்துக்காக இவ்வருகே சிலருக்குச்சிலமினுக்கஞ்சொல்லுமே; அத்தைக்கொண்டு கிடந்தவிடமறியாமேயொதுங்கிக் கிடந்தவற்றை யாயிற்று ஆதரிப்பது. அதுதன்னிலும், ஒரு தேவதையே இவனுடைய ஸர்வாபேக்ஷிதங்களையுங் கொடுக்கமாட்டாதே. ஒருவனாய் பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தைக் கொடுக்கிறானன்றே. அதுவேண்டில் (உ) "கதிமிச்சேஜ் ஜநார்த்தநாத் - கதிமிச்சேத் ஜநார்த்தநாத்" என்னக்கடவதிறே. ஆக,

---

(க) ஸ்ரீராமா-அயோ-௰௬-எ. † (பா) இவ்வுபகாரங்களை.

(உ) ப்ரஹ்மாண்டபுராணம்.

விபூதி காமனாகி வின்னானைப்பற்றுவான். புத்ரகாமனாகி வின்னானைப் பற்றுவான், பசுகாமனாகிவின்னானைப் பற்றுவான்'' என்றிங்ஙனே யொன்றுக்கொருவராய்ப், பலராயிருக்கும். (தானறி தெய்வம்) ப்ர மாண ப்ரஸித்தமாயிருப்ப தொன்றன்றே; ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் மிக்கிருக்கிற தானறியும் தெய்வத்தையாயிற்று பற்றுவது. (பேணுதல்) அவைதனக்கென்ன வொரு உத்கர்ஷ மில்லாமையாலே, மொட்டைத்தலையனை §"பனியிருங்குழலன்'' என்று கவிபாடுவாரைப்போலே ஆஸ்ரயிக்கிறவிவனுக்கே பரமாயிற்று, அத் தேவதைகளுக்கு ஈஸ்வரத்வம் ஸம்பாதித்துக் கொடுக்கையும். (தனாது) இவன் சொன்னபோதாக வவை ஆஸ்ரயணீயங்க ளாகிற னவுமல்ல; இவன்றானங்கேசிலபெற்று னாகிறானு மல்லன்; இத் தால் பலித்ததாயிற்று - விசேஷஜ்ஞர்க்குத்தன்னறிவில் குறைவைப் ப்ரகாசிப்பித்தானா மித்தனை; (தனாது புல்லறிவாண்மை பொருந்தக் காட்டி) தன்னுடைய ஜ்ஞாநத்தில் அல்பதையை விசேஷஜ்ஞர்க்குத் தேறும்படி தெரிவிப்பித்து. பலம்பெறும்போது பரதேவதையை ஆஸ்ரயித்துப்பெறவேணுமே, ஆஸ்ரயிக்குமிடத்தில் (க) "నిదిధ్యాసితవ్యః - நிதித்யாஸிதவ்ய:'' என்றும். (உ) "తమేవం విద్వానమృత ఇహభవతి । నాన్యః పన్థాః - தமேவம் வித்வாநம்ருத இஹபவதி, நாந்ய: பந்தா:'' என்றும் உபாஸந வாக்யங்களிற் சொன்னபடியே காரணவஸ்துவை யுபாஸிக்கிற தன்றிறே. (கொல்வன முதலாவல்லன முயலுமினையசெய்கை) "ஆட்டையறுத்துத்தா, ப்ரஜையை யறுத்துத்தா'' என்பனசிலவும், நிஷித்தத்ரவ்யங்களைக் கொண்டு பரிமாறவேண்டுவனசிலவும், இவையாயிற்றுசெயல்கள். ஆஸ்ரயணங்கள் தானே நரகமா யிருந்ததே! இப்படி ஆஸ்ரயித்துப்பெறும் பலத்தைப் பார்த்தால் அதுபெறுமதில் பெறுதொழிகை நன்றாயிருக்கும்; (இன்புதுன்பளி) ஸுகதுக்கமிஸ்ரமான பலத்தையாயிற்றுதருவது. நிஷ்க்ருஷ்டஸுகமான மோக்ஷம் அவற்றுக்கில்லையே. ஆகச்செய்ததாயிற் றென்னென்னில், தன்னோடொத்திருப்பானொருவனைப், பவோபகரணபூதனைப், நித்யஸம்ஸாரியா யிருப்பானொருவனை

---

§ பனியிருங்குழலன் - குளிர்ந்தும் பரந்துமிருக்கிற குழலையுடையவன்.

(க) ப்ருஹதாரண்யம்-ச-௬-௫. (உ) புருஷஸூக்தம்.

யாஸ்ரயித்துப் பலம் பெறப்பார்த்தவிதுதான் நித்யஸம்ஸாரியாகைக்குக் க்ருஷிபண்ணினுயிற்று; (தொன்மாமாயப் பிறவியுள் நீங்காவித்யாதி) பழையதாய் காரணமாயிருக்கிற மாமாயமுண்டு - இம்மாயை, "இது ஒருவரால் கடக்க வொண்ணாது" என்று அவனருளிச்செய்த ப்ரக்ருதி; இப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநஜந்மங்களிலே புக்குமீளவிரகின்றிக்கே, பலவகைப்பட்டிருக்கிற மாமாயமுண்டு - சப்தாதி விஷயங்கள், அவற்றிலே, (நளிர்ந்தழுந்துமா) எடுத்ததனையும் தரையளவு மழுந்தாநின்றன. (உலகினதியல்வே) வகுத்த விஷயத்தைப்பற்றி நிஷ்க்ருஷ்ட ஸுகத்தைப்பெறப்பாராதே சேதநர் அப்ராப்தவிஷயத்தை யாஸ்ரயித்து அநர்த்தத்தைப் பெறப் பார்ப்பதே! இதென்ன படுகொலை யென்கிறார். ௬.

அரு:—ஆறும் பாட்டு. (ஓ ஓ) "ஈன்றோள்" - ஈன்றவள். நெரியகழிய, அநேககாலம் நொந்து அவளுடைய ப்ரஸவவேதனையால் வந்த ஶ்ரமங்கழிய. "புடைப்பல்தானறி"-புடையென்று-துறையாய், ப்ரஸித்தப்ரமாணங்கள் பலவற்றினாலும் ப்ரதிபாதிக்கப் படுவதாமதன்றிக்கே யொழிய ப்ராமாணிகர் நாலுபேரிருந்த ஸபையிலே அறிவரிதான ஸூக்ஷ்மதேவதையை. "நளிருகை" - து:கிக்கை. நளிர்ந்தழுந்தும். "ஓ ஓ உலகினதியல்வே" என்று க்ரியை. ௬.

தாத்பர்யம்.—இதில், இப்படி ஸர்வசேஷியாய், பரமோதாரனான ஸர்வேஸ்வரனையே ஸர்வகாலமும் மங்களாசாஸநம் பண்ணப்ராப்தமாயிருக்க, அதைத்தவிர்ந்து, வீணுக்காலம் கழிகிற தங்களிழவைக்கண்டு சோகிக்கவுமறியதே யநர்த்தப்படுகிற ஸம்ஸாரிகளைக்கண்டு தாம் வருந்திக்கூப்பிடுகிறார்.

ஸம்ஸாரி சேதநர்கள் மஹாப்ரள்யத்தில், தாங்களொரு புருஷார்த்தம் பெற யோக்யதை யற்றவர்களாயிக்க, இவர்களைக் கரையேற்றக்கருதி ஆதிஸ்ருஷ்டியில் ஸர்வேஸ்வரன் இவர்களுக்குக் கரணகளேபரங்களையும் ஜ்ஞானத்தையு மளித்தான். பின்பொருகால் ப்ரளயத்தில் மஹாஜலத்தில் மூழ்கிக்கிடந்த இவ்வுலகை வராஹமாயவதரித்து உத்தரித்தான். இனி யிவ்விதமான வாபத்து நேரிடாதபடி ப்ரளயம்வருவதற்கு முன்னமே இவற்றைத்தனுதரத்தில் வைத்து ரக்ஷித்தான். பின்னை யிவற்றை நெருங்கிவருந்தாதபடி ஸ்ருஷ்டிகாலத்தில் வெளியிலுமிழ்ந்தான். நடுவில் துஷ்டர்கள்கைக்கொண்டு நலிய த்ரிவிக்ரமனாயவதரித்து அவர்களையழித்து இவற்றைமீட்டு ரக்ஷித்தான். இன்னுமிதற் கென்னவிபத்து நேரிடுமோவென்றுவிசாரித்து வேண்டும் ஸம்விதாநங்களைப் பண்ணினான். இப்படி பரமோபகாரகனாய், சாஸ்த்ரங்களில் த்யேயவஸ்துவாகச் சொல்லப்பட்ட பரமகாரண பூதனாய், அத்விதீய பரதேவதையான ஸ்ரீமந்நாராயணனிருக்க, இவர்களவனை யுபேக்ஷித்துத் தம்மோ

டொக்க ஸம்ஸாரிகளாய், க்ரூரகர்ம நிஷித்தாசரணைக ஸந்துஷ்டராய், அதி க்ஷுத்ரபலப்ரதராய், பகவத்விபூதியிலொரு மூலையிலொதுங்கிக் கிடக்கிறருத்ராதி க்ஷுத்ரதேவதைகளைப் பரதேவதையாகப்ரமித்துத் தன்னுடைய அறிவு கேட்டை எல்லாரு மறியும்படி யவற்றைத்தொழுகிற இஸ்ஸம்ஸாரிகளின் செயல்கள், தன்னை வருந்திப்பெற்ற தாயினிடத்தில் உபகாரஸ்ம்ருதியற்று அவளையுபேக்ஷித்து ஒரு அசேதநமாய் உபயோகமற்ற ஒரு மரப்பாச்சியைக் கொண்டாடுவது போன்றதாய், அநாதியான இஸ்ஸம்ஸாரத்தில் மோஹஜநங்களான சப்தாதி விஷயங்களை யாசைப்பட்டு ஆழ்ந்தசேற்றிலழுந்திவருந்துகைக்காகச் செய்த வைகளாம். ௬.

நளிர்மதிச்சடையனும்நான்முகக்கடவுளும்,
தளிரொளியிமையவர்தலைவனுமுதலா,
யாவகையுலகமும்யாவருமகப்பட,
நிலம்நீர்தீகால்சுடரிருவிசும்பும்,
மலர்சுடர்பிறவும்சிறிதுடன்மயங்க,
ஒருபொருள்புறப்பாடின்றிமுழுவது
மகப்படக்கரந்து, ஓராலிலைசேர்ந்தவெம்
பெருமாமாயனையல்லது,
ஒருமாதெய்வம்மற்றுடையமோயாமே. எ.

திருவாசிரியம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அர்த்தம்.—நளிர்-குளிர்ந்த, மதி-சந்த்ரனையுடைய, சடையனும் - ஜடாதாரியான ருத்ரனும், நான்முகக் கடவுளும் - நாலுமுகங்களையுடைய, ப்ரஹ்மதேவனும், தளிர்-(நீலமான்) தளிரினுடைய, ஒளி-தேஜஸ்ஸையுடையனாய், இமையவர்-தேவர்களுக்கு, தலைவனும் முதலா-ராஜாவாகிய இந்த்ரனுமாகிய இவர்கள் முதலான, யாவகை உலகமும் - எவ்வகைப்பட்ட (ஸமஸ்த மான) லோகங்களும், யாவரும் அகப்பட-ஸமஸ்தசேதநரு முட்பட, நிலம்-பூமியும், நீர்-ஜலமும், தீ-அக்நியும், கால்-காற்றும், சுடர்-(சிரகாலஸ்த்தாயித்வப்ரஸித்தியாகிற) தேஜஸ்ஸினால், இரு - வ்யாப்தமாயிருக்கிற, விசும்பும் - ஆகாசமும், மலர்-மலர்ந்த, சுடர் - கிரணங்களையுடைய சந்த்ர ஸூர்யர்களும், பிறவும்-மற்றுமுள்ள வஸ்துக்களும், உடன்-ஏககாலத்தில், சிறிது-(வயிற்றில்) ஏகதேசத்தில், மயங்க-கலக்கும்படி (வஸிக்கும்படி), ஒரு பொருள் - ஒருவஸ்துவும்-புறப்பாடு இ[illegible]றி-வெளிப்படாமற்படி, முழுவதும்-எல்லாவற்றையும், அகப்

பட-உள்ளேயாம்படி, கரந்து-(உண்டு வயிற்றிலே) மறைத்து, ஓர் ஆலிலை-ஒரு ஆலினிலையில், சேர்ந்த-சயநித்தவனாய், எம்-எமக்குஸ்வாமியாய், பெரு-பெரியனாய், மா - அபரிச்சிந்நமான, மாயனை அல்லது - ஆஸ்சர்ய சக்தியுக்தனை, ஸ்ரீமந்நாராயணனை யொழிய, மற்று-வேறான, மா-பெரிய, (க்ஷுத்ரமான), ஒருதெய்வம்-ஒரு தேவதையை, யாம்-நாம், உடையமோ-(ஆஸ்ரயணீயமாக) உடைத்தாவோமோ? எ.

அவ.—ஏழாம்பாட்டு. (நளிர்மதி இத்யாதி) "சேதநரெல்லாருக்கும் செய்யவடுப்பது - அவனுக்கு மங்களாசாஸநம் பண்ணுகையாயிருக்க இதரதேவதைகளை யாஸ்ரயித்து ஸம்ஸாரபந்தம் வர்த்திக்கும்படி பண்ணு நிற்பர்கள், இதென்ன படுகொலை, இவ்வநர்த்தமென்னால் பொறுக்கப் போகிறதில்லை" என்றார்கீழ்; "அல்லாதார் செய்தபடி செய்கிறார்கள் ; நாம்முந்துறமுன்னம் §இவ்வநர்த்தத்தைத் தப்பப்பெற்றோம்" என்று உகக்கிறாரிதில். நாட்டார் கண்டார் காலிலே குனிந்து திரியாநிற்க, நமக்குமுந்துறமுன்னம் தேவதாந்தரஸ்பர்சமின்றிக்கே யிருக்கப்பெற்றோமே, இந்தலாபமே யமையாதோவென்று ஸ்வலாபத்தைப்பேசி இனியராகிறார். "அவன் ஸர்வபதார்த்தங்களையும் வயிற்றிலேவைத்து நோக்குகிறபோது நம்மோடொக்க அவன் வயிற்றிலே புக்குப் புறப்பட்டவர்களிலே சிலரை யாஸ்ரயித்து, பலத்துக்கு அவர்கள் கைபார்த்திருக்கையாகிற விப்புன்மை யின்றிக்கே யொழியப்பெற்ற விதுவே யமையாதோ?" என்று ப்ரீதராய், அல்லாதப்ரபந்தங்களை யந்தாதியாக்கிக் கொண்டுபோந்த விவர், இத்தையந்தாதி யாக்கமாட்டாதே யுகப்புக்கிதுக்கு மேற்பட இல்லாமையாலே இவ்வநுபவத்தோடே தலைக்கட்டுகிறார். "நளிர்மதிச் சடையனும்" என்று தொடங்கி. யாவகையுலகமும் யாவருமகப்பட வாயிற்றவனுண்டது, தன்னோடொக்கச் சிறையிருந்தவர்களிலே சிலரையாஸ்ரயித்துப் பெறுவதொரு பலமுண்டோ? எ

வ்யா.—(நளிர்மதிச்சடையனும்) ஸாதக வேஷந்தோற்ற ஜடையைத்தரித்துக் கொண்டிருக்கச்செய்தேயும் துர்மாநத்தாலே "ஸாதக ப்ரதாநன்" என்று தோற்றும்படி தாழை மடலைக்கிறித் தலையிலே வைப்பாரைப்போலே குளிர்ந்த சந்த்ரனை ஜடையிலே தரித்த ருத்ரனும். (நான்முகக் கடவுளும்) அவன்றனக்குங்கூட ஜநகனாய்

§ (ப) இவ்வர்த்தத்தைப் பெற்றோமென்று.

ஸ்ருஷ்டிக் குறுப்பாக நாலுமுகத்தையுடையனு யிருக்கிற சதுர்முகனுகிற தெய்வமும். இவர்களிருவரு மிரண்டு கார்யத்துக்குக் கடவரா யதிகாரிகளாயிறே யிருப்பது; குசவனையும் புறமடக்கியை யும்போலே. (தளிரொளி யித்யாதி) போகப்ரவணனுகையாலே அப்ஸரஸ்ஸுக்களை மெய்க்காட்டிக்கொண்டு வடிவைப்பேணி தேவர்களுக்கு நிர்வாஹகனுயிருக்கிற இந்த்ரன் தொடக்கமாக எவ்வகைப் பட்ட லோகங்களையும், அவ்வவலோகங்களி லுண்டான எல்லாச் சேதநரையும் தப்பாமே. (நிலநீரித்யாதி) அவர்களெல்லார்க்குங் காரணமாயிருக்கிற பூதபஞ்சகமும். "சுடரிருவிசும்பும்" என்றது-உண்டாமிடத்தில் மற்றை நாலுக்கு முன்னே †யுண்டாமதாகை யாலும், அழியுமிடத்தில் அவையழிந்தாலும் தான் சிறிதுகாலம் ‡நின்றழியுமதாகையாலும் வந்தபுகரைப்பற்ற. (மலர்சுடரித்யாதி) சந்த்ர ஸூர்யர்களும் மற்றுமுள்ள மநுஷ்யாதிகளு மிவையடைய. (சிறிதுடன்மயங்க) சிறியதாய்க்கொண் டுடனே:மயங்க. சிலபேருக் கிடச்சொல்லி உண்பார்பலருண்டானல் சோறுமட்டமாமாபோலே, ரக்ஷ்யமாய்க்கொண்டு நாநாவாய்ப்புகுகிற பதார்த்தங்க ளளவுபடும் படியாகவாயிற்று தன்வயிற்றிலேவைக்கிறபோது பாரிப்பின்பெருமை. இவையடங்க அல்பமாகக்கொண்டு ஒன்று ஒன்றைவிடாதே தன் பக்கலிலே கலச. அன்றிக்கே, "சிறிதுடல்மயங்க" என்று பாடமாய், ஓராலந்தளிரினுள் ளடங்கினவடிவிலே கலச. "உடன், உடல்" என்கிறவிடத்தில் நகரலகரங்களுக்கொரு விரோதமில்லை. (ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதுமகப்பட) ஒருபதார்த்தமும் பிறிகதிர்படாதபடி எல்லாவற்றையும், (கரந்து) ப்ரளயம்வந்தால் முன்புறத்தைக்காட்டிலும் வயிற்றை இளைத்துக்காட்டலாம்படி ஒரு விக்ருதியின்றிக்கே யிருக்கை. (ஓராலிலை சேர்ந்த எம்பெருமா மாயனை யல்லது) இவற்றை இப்படி வயிற்றிலேவைத்துத் தான் முகிழ்விரியாதே பவனுயிருப்பதொரு ஆலந்தளிரிலேகண் வளர்ந்த நம்முடைய வாஸ்சர்யசக்தியுக்தனையொழிய. (க) [பாலன்றனதுருவாயேழுலகுண்டு] (உ) "యశోదా స్తనన్ధయ మత్యన్తం విముగ్ధమ్" யசோதாஸ்தநந்தய மத்யந்தம்விமுக்தம்" என்னும்படி முக்தமான

† (பா) உண்டாய், ‡ (பா) நின்றழியும்படி தாழ்க்கையாலும்.

(க) முதல் திருவ - எக, (உ)

வடிவையுடையனாய், ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து. [ஆலிலையின்மேலன்று நீவளர்ந்தது மெய்யென்பர்] (க) "ஆலின் மேலோ ரிளந்தளிரிற் கண்வளர்ந்தவீசன்" என்கிறபடியே முகிழ் விரியாதவாலந்தளிரிலே தரிக்கைக்கு ஒரு யசோதாதிகளின்றிக்கே யிருக்க நீ கண்வளர்ந்தருளினவற்றை "மெய்" என்று ஆப்தரான ருஷிகள் எழுதாநின்றார்கள். (உ) "కథన్త్వయం శిశుశ్శేతే లోకేనాశముపాగతే । శాఖాయాం వటవృక్షస్య పల్లవేతుశుచిస్మితః-கதந்வயம் சிசுச்சேதே லோகேநாசமுபாகதே । சாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவேதுசுசிஸ்மித:" என்றாயிற்றவர்களெழுதுகிற பாசுரம், [ஆலன்றுவேலைநீருள்ளதோ] அவ்வால்தான் அன்று மண்ணைக் கரைத் துப்பொகட்ட ஜலத்திலேயுள்ளதோ? நிராலம்பநமான வாகாசத்திலேயுள்ளதோ? அன்றிக்கே, கார்யாகாரங் குலைந்து கரந்து கிடக்கிற மண்ணிலே யுள்ளதோ? [சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு] பருவம் நிரம்புவதற்குமுன்னே எழுபிராயத்திலே யொரு படிப்பட மலையைத் தரித்துக்கொண்டு நின்ற நீ சொல்லு. இதுவு மோராஸ்சர்யமிறே, இதுவுஞ் சொல்லவேணும், அதுவுஞ்சொல்ல வேணும். இவை மூன்றும் விஸ்மயமாயிருப்பன சில அகடிதங்களாயிருந்தன. "அவன் பின்னை இவர்களுக்குச் சொன்ன உத்தரமேது" என்று பட்டரைக்கேட்க, "அவன்றானும் 'ஆழ்வார் வந்தால் கேட்கக்கடவோம்' என்று நினைத்திருந்தான் காணும்" என்ன, பின்னையும் 'நீ ஸர்வாதார பூதனுமித்தனைபோக்கி உன்னை யொழியப் புறம்பேயொன்றுக் கொன்று ஆதாரமாக வல்லதொன்றுண்டோ?' என்று அவன் ஸர்வாதாரபூதனா யிருக்கிறபடியைக் கண்டு இதோ ராஸ்சர்யமே! என்று விஸ்மிதராகிறார்" என்றருளிச் செய்தார். இப்படிப்பட்ட வாஸ்சர்ய யோகத்தைச் சொல்லுகிறது- (பெருமாமாயன்)என்று. அவனையொழியப்புறம்பே கால்காணித்தெய்வமுடையோமோ? நாம். "முந்துற ரக்ஷகனாகிறேன்" என்று பச்சையிடுவித்துக்கொண்டு, சிலநாள்கழிந்தவாறே வடிவைக்காட்டி "நானுமுன்னைப்போலே ஸாதகன்காண்" என்று சொல்ல அவனைவிட்டாற்போலே, எடுத்துக்கழிக்கைக்குத்தானொரு தேவதையுண்டோ?

(க) திருமொழி - உ - கo - க. (உ)

நமக்கு. மார்க்கண்டேயனை "ரக்ஷிக்கிறேன்" என்று சொல்லிப் பச்சையிடுவித்துக் கொண்டு அநந்தரம் ஜடையைக்காட்டி "நானு முன்னைப்போலே ஸாதகன், ஒருதலையைப்பற்றிக் காணிருப்பது; என்னையாஸ்ரயியுங்கோள் என்று பிறர்சொல்லும் வார்த்தையை 'மெய்' என்று விஸ்வஸித்திருக்கும்படி ப்ரமித்தாயாகாதே, பொறு, உனக்காஸ்ரயணீயஸ்த்தலங்காண்" என்று கொடுபோய் ஸர்வேஸ்வரனைக்காட்டிக் கொடுத்தானிறே. (க) "బ్రహ్మాణం † నీలకణ్ఠంచ యా శ్చాన్యాదేవతాస్స్మృతాః। ప్రతిబుద్ధానసేవన్తేయస్మాత్పరిమితంఫలమ్" ப்ரஹ்மாணம் நீலகண்டஞ்ச யாஸ்சாந்யாதேவதாஸ்ஸ்ம்ருதா:। ப்ரதி புத்தாநஸேவந்தேயஸ்மாத்பரிமிதம்பலம்" ப்ரஹ் மாவையும்ருத்ரனேயும்அல்லாத தேவதைகளையும்அறிவுடையராயிருப்பார் ஆஸ்ரயியார்கள்; அதுக்கடியென்னென்னில், பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷத்திலே இவனுக் கபேக்ஷையுண்டானல் அவர்களது கொடுக்கமாட்டார்களே, அவர்களுக்குமோக்ஷப்ரதத்வ மில்லாமையாலே; இனி இவ்வருகே சிலவற்றையிறே கொடுப்பது; அவையல்பமிறே, அவைஅவனிவனுக்குக் கொடுக்கவுமாய், இவனவனுக்குக் கொடுக்கவுமாயிறேயிருப்பது. (உ) "స్కన్దరుద్రమహేన్ద్రాద్యాః ప్రతిషిద్ధాస్తు పూజనే- ஸ்கந்தருத்ரமஹேந்த்ராத்யா: ப்ரதிஷித்தாஸ்து பூஜநே"

(ங) "திருவடிதன்நாமம் மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்னக் கடவதிறே, பர்த்தாவின்பக்கல் ஆநுகூல்யமற்றிருக்க, பர்த்ரந்தரபரிக்ரஹம் பண்ணுதொழிகையிறே இவள் அவனுக்காகையாகிறது; பகவத்ப்ராவண்யம்க்ரமத்திலே பிறக்கவுமாம், இவனுக்கு முந்துற வேண்டுவது - தேவதாந்தர ஸ்பர்சமறுகையிறே; இதுண்டானல் யோக்யதை கிடக்குமிறே. அ.

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

திருவாசிரிய வ்யாக்யாநம் முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

(க) பாரதம் மோக்ஷ. † శితికణ్ఠం. என்றும்பாடம் காண்கிறது.

(உ) (ங) நான்முகன்திரு. சுஅ.

அரு:— ஏழாம் பாட்டு.—ஸ்ருஷ்டிக் கநுரூபம் - நாலுமுகத்தாலும் வேதோச்சாரணம் பண்ணி ஸ்ருஷ்டிக்கை. "தளிரொளி" - நீலமாயிருக்கிற தளிரின்நிறத்தை யுடையன். "சிறிது" - திருவயிற்றி லேகதேசத்திலே. "உடன்" சேர்ந்து. "மயங்க"-கலக்கையாய், ஸுகிக்கையென்றுமுந்தின வர்த்தம். "ஒருமா"-ஒரு வென்று - க்ஷுத்ரமாய், மா என்று-அல்பமாய், அத்யந்தம் க்ஷுத்ரதேவதையை யுடையோமல்லோ மென்றபடி. அந்தாதியாய் வந்தது முடிவிலு மந்தாதியாக வேண்டாவோ வென்ன அருளிச்செய்கிறார் (அந்தாதியாய்) இத்யாதி. செக்கரென்று முடியும்போது தேவதாந்தரவிஷயம் பண்ணப்போகாமையாலே யென்றபடி. எ.

திருவாசிரிய வ்யாக்யாந அரும்பதம் முற்றிற்று.

தாத்பர்யம்.—இதில், இஸ்ஸம்ஸாரிகளைப்போலே நாமும் விஷயாந்தரங்களிலகப்பட்டு அநர்த்தப்படாதே அடியேதொடங்கி விஷயாந்தரவிமுகராய் பகவதாஸ்ரயணைகபரராய்ப்போந்தோமே யென்று தமக்கு பகவத்விஷயத்திலுண்டான ஊற்றத்தைக்கண்டு ஹ்ருஷ்டராகிறார். எ.

நாட்டார்தன்னை "இவன்ஸுகி" என்றுப்ரமித்து மதிக்கைக் காகக் குளிர்ந்த சந்த்ரனை சிரஸில்தரித்து, தான்பண்ணும் தபஸ்ஸுக் கங்கமாக ஜடையையுடையனான ருத்ரனும், ஸ்ருஷ்ட்யதிகாரத்திலே நியமிக்கப்பட்ட சதுர்முகனும், மற்றுமுள்ள தேவர்களும், அவர்களுக்கதிபதியான இந்த்ரனும் பாதாளாதி ஸத்யலோகாந்தமானசதுர்த்தசபுவனங்களும், அவற்றிலுள்ள ஸகலப்ராணிகளும், பஞ்சபூதங்களும், சந்த்ரஸூர்யாதிகளும், இவையெல்லாம் தன்திருவுதரத்தி லேகதேசத்திலடங்கும்படி, ப்ரளய காலத்திலே எல்லாவற்றையுமெடுத்து விழுங்கி ஓராலந்தளிரில் கண்வளர்ந்தருளுகிற அத்யாஸ்சர்ய சக்தியுக்தனாய், பராத்பரனான ஸ்ரீமந்நாராயணனைவிட்டு நமக்கு ஆஸ்ரயணீயமானவேறொரு தேவதை கிடையாது. இது நாம் பெற்றமஹாபாக்யமென்று இதிலே யீடுபட்டு ஆநந்திக்கிறார். எ.